விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 13 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06.07.2012) | பக்கங்கள்: பதினாறு

'கல்வி ஒளி' இலவச இணைப்பிதழ் உள்ளே...

## யாழ்.ஆஸ்பத்திரி பணிப் பகிஷ்கரிப்புக்கு தடை

யாழ்.போதனா வைத்தியசாலையில் இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த அடையாள வேலை நிறுத்தத்துக்கு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா நேற்று இடைக்காலத் தடை உத்தரவு விதித்தார். யாழ்.வைத்தியர் சங்கம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்தது. ஆர்ப்பாட்டமோ, வேலை நிறுத்தமோ மேற்கொள்ளப்படக் கூடாதென்று 14 நாட்களுக்கு இடைக்கால தடை உத்தரவை நேற்று நீதிமன்றம் பிறப்பித்தது. யாழ்.வைத்தியர் சங்கத்தின் தலைவர் டாக்டர் எஸ்.விமலன், உதவிச் செயலாளர் மு. கணேசநாதன் ஆகியோருக்கு இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிசார் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த மனுவொன்றினை ஏற்றே மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டது. இந்தப் பணிப் பகிஷ்கரிப்பினால் மக்கள் பெருத்த பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய நிலை இருப்பதாகப் பொலிசார் மன்றுக்குச் செய்த விண்ணப்பத்தில் தெரிவித்திருந்தனர். பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றால் அன்றாடம் நோயாலும் விபத்துகளிலும் சிக்கிக்

02




இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் கைதடியில் அமைக்கப்பட்டுள்ள பனை ஆராய்ச்சி நிலைய கட்டடத்தினையும், தொழில்நுட்ப உபகரணங்களையும் படங்களில் காணலாம். கட்டடம் எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

# யாழ்.நீதிவானுக்கும் நீதித்துறைக்கும் மிரட்டல்

## பூரண புலன் விசாரணைக்கு நீதிவான் கணேசராசா உத்தரவு

நீதித்துறைக்கும், நீதவானானதனக்கும், நீதித்துறை தொடர்பாகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும், பத்திரிகைகள் மூலமாக விடுக்கப்பட்டு வரும் மிரட்டல்கள் தொடர்பாக முழுமையான புலனாய்வு விசாரணையை நடத்துமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா நேற்று உத்தரவிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. சுமந்திரனிடம் யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அவர்கள் மன்னிப்புக் கோரினாரென்ற எவ்வித ஆதாரமுமற்ற செய்தி கடந்த மாதம் 28ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. மறுநாள் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகிய மேற்படி பத்திரிகையின் ஆசிரியரான பிரேமானந் என்பவர் எவ்வித ஆதாரமுமற்ற அந்தச் செய்தியைப் பிரசுரித்தமைக்காக மன்றிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். பத்திரிகை வாசகர்களிடமும், சட்டத்தரணிகள் உட்பட நீதிமன்றப் பாவனையாளர்களிடமும், நீதிவானிடமும் பத்திரிகாசிரியர் நிபந்தனையற்ற விதத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். அத்துடன் இவ்வாறான உண்மையற்ற, அவதூறான செய்திகளை எதிர்காலத்தில் பிரசுரிக்க மாட்டோமென்றும் மன்றுக்கு உறுதியளித்திருந்தார்.

யாழ்.நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அவர்கள் ஏற்கனவே விதிக்கப்பட்ட தடை உத்தரவு சம்பந்தமாக வெளியிட்ட விமர்சனங்கள் ஆகியவை நீதித்துறைக்கும், நீதிவானுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் மிரட்டல்கள் விடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

02

## ஆட்கடத்தல் இரு இலங்கையர் தமிழகத்தில் கைது

ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் சென்னையில் இரு இலங்கையர்கள் கைது தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் சிலரிடம் பணம் வசூலித்துக் கொண்டிருந்த இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட இலங்கையர்களிடம் இருந்து செய்மதி தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

திருகோணமலையைச் சேர்ந்த ரமேஸ் எனப்படும் 38 வயதுடைய ராமச்சந்திரன் மற்றும் 49 வயதுடைய மோஹன் காந்தி ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள

02

## பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு இனிமேல் கடும் தண்டனை

பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாலியல் துஷ்பிரயோகம், போதைவஸ்து விவகாரங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது

02

## இலங்கை மறுப்பு

அரசாங்கத்தை எதிர்க்கும் இணையத்தளங்களை முடியதை மனித உரிமை குழுக்களும் வொஷிங்டனும் கண்டித்ததை தொடர்ந்து ஊடக சுதந்திரத்தை தடுப்பதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை நேற்று முன்தினம் இலங்கை வன்மையாக மறுத்துள்ளது.

"இலங்கையின் புதினப் பத்திரிகைகளை பாருங்கள். இலங்கையில் பத்திரிகை

02

## அரசியல் தீர்வு குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேசினேன்

### கலைஞர் கருணாநிதிக்கு மன்மோகன்சிங் கடிதம்

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தி.மு.க. தலைவர் கலைஞர் எழுதிய கடிதத்துக்கு பிரதமர் மன்மோகன்சிங் பதில் அனுப்பியுள்ளார். அதில் கூறி இருப்பதாவது:

இலங்கை ஜனாதிபதியின் பேச்சு மற்றும் இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க பேச்சு தொடர்பாக ஜூன் 20ஆம் திகதியிட்ட தாங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றது.

ஜூன் 21ஆம் திகதி

02

## பஜாஜ் வாகனங்களின் விலைகள் குறைப்பு

இலங்கையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வாகனங்களின் விலையை பஜாஜ் ஓட்டோ நிறுவனம் குறைத்துள்ளது. தீர்வை அதிகரிப்பு காரணமாக குறைவடைந்த விற்பனையை மீள அதிகரிப்பதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02

## இலங்கை விமானப் படையினருக்கு தமிழகத்தில் பயிற்சி: திருப்பி அனுப்ப கோருகிறார் கருணாநிதி

தமிழகத்திற்கு பயிற்சி வந்த இலங்கை விமானப் படை வீரர்களை உடனடியாக மத்திய அரசு திருப்பியனுப்ப வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார். சென்னை கோபாலபுரம் வீட்டில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த கருணாநிதியிடம், இலங்கையின் விமானப் படையைச் சேர்ந்த ஒரு சிலருக்கு தாம்பரத்தில் பயிற்சி அளிப்பதாகச் சொல்லப்படுகிறதே என்று கேட்கப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த கருணாநிதி, அந்தச் செய்தி

02

# ஊடகச் சுதந்திரத்திற்கு எந்த அச்சுறுத்தல்களும் இல்லை

## ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல



செய்தி இணையத்தளங்களை பதிவு செய்வதை கட்டாயமாக்கும் வகையில் ஊடகங்கள் தொடர்பான சட்டங்களை திருத்தும் செய்யவுள்ளதாக அரசாங்கம தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகவில்லையெனவும் அமைச்சரவையின் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார்.

"ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள் ளாகவில்லை. மக்களுக்கான பதிலளிக்கும் உரிமையை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே அனைத்து செய்தி இணையத்தளங்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

இரு இணையத்தளங்கள் முற்றுகையிடப்பட்டமை தொடர்பில் சர்வதேச மற்றும் உள்ளூரின் எதிர்ப்பை ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியபோது, நாட்டின் சூழ்நிலை தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்கை மீறியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். மேலும் இந்த இணையத்தளங்களை பதிவுசெய்யுமாறு கூறுவது பயமுறுத்தலாகக் கொள்ளப்படலாமெனச் சுட்டிக்காட்டப்பட்டபோது அது அவ்வாறில்லையெனவும் அமைச்சர் கூறினார்.

"ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் நான் இந்நாட்டின் மக்களுக்கு பதிலளிக்க வேண்டிய நிலையிலுள்ளேன். பல இணையத்தளங்கள் ஊடக சுதந்திரம் என்ற கோஷத்தை மக்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துகின்றன.

அது நடக்க எம்மால் அனுமதிக்க முடியாது. அச்சுறுத்தல்கள் தொடர்பான ஊகங்களுக்கு என்னால் பதிலளிக்க முடியாது. ஏனெனில் அது ஊகங்களின் அடிப்படையிலான பதிலாகிவிடும். எனவும் அவர் கூறினார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை உட்பட ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பில் டெய்லிமிரர் சுட்டிக்காட்டியபோது, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் முனைப்பாக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார். நீதிச் செயன்முறை நடைபெறுகின்றது. எம்மால் ஒரே இரவில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாது. இக்குற்றச்செயல்கள் தொடர்பில் எவருக்கேனும் தகவல் தெரிந்தால், எங்களுக்கு தெரிவிக்க முன்வருமாறு நாங்கள் அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். என அவர் கூறினார். இவ்விரு இணையத்தளங்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே முற்றுகையிடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# உப்போடை களப்பில் நீராடிக் கொண்டிருந்தவர் முதலைக்குப் பலி

மட்டக்களப்பு - கல்லடி - உப்போடை களப்பில் நீராடச் சென்ற நபரொருவர் முதலை இழுத்துச் சென்று உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட குறித்த நபரின் சடலம் இரவு 10.40 அளவில் மீட்கப்பட்டுள்ளது. கொழும்பு 15 மோதரையைச் சேர்ந்த 32 வயதுடைய ருவான் சஞ்சீவ பெரேரா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 5 சதவீதத்தால் அதிகரிப்பு

சிறுவர் பாலியல் வல்லுறவு மற்றும் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறியுள்ளார். கடந்த 6 மாதங்களில் 975 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறார்கள் வீட்டில் கவனிக்கப்படாமல் விடப்படும்போது, பேஸ்புக் போன்ற சமூக இணையத்தளங்கள் ஊடாக, அல்லது செல்லிடத் தொலைபேசி ஊடாக குற்றம்புரிபவர்களின் தாக்குதல்கள் அபாயத்திற்குள்ளாகுவதாக அவர் கூறினார்.

இத்தகைய குற்றம்புரிபவர்களின் நடத்தையை ஆபாச படங்கள் தூண்டுவதாகவும் இப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு கடுமையான சட்டங்கள் தேவை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த வருடம் 1775 பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதாகவும் 1169 சம்பவங்கள் சிறார்கள் தொடர்பானவை எனவும் அவர் கூறினார்.

இச்சம்பவங்கள் தொடர்பான 90 சதவீதமான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என அவர் கூறினார்.

## யாழ்.நீதவானுக்கும்...(தொடர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில சட்டத்தரணிகளின் நடவடிக்கைகள் தமக்கும், நீதித்துறைக்கும் மறைமுகமான பாரிய அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக நீதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நீதித்துறையை அவமதிக்கும் வகையிலும் அமைந்திருப்பதால் அது தொடர்பாகவும் முழுமையான புலனாய்வு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதி உதயன் பத்திரிகை ஆசிரியர் பிரேமானந் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார் அது தொடர்பில் நீதிமன்ற வழக்கேட்டிலும் கையெழுத்திட்டிருந்தார், நீதிவான் கனேசராசா அவர்கள் சுமந்திரனிடம் மன்னிப்புக் கேட்கவில்லையென சுமந்திரன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம் நீதிமன்றில் பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...(தொடர்)

சுதந்திரம் இல்லை என உங்களால் கூற முடியுமா?" என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் டோக்கியோவில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது கேட்டார்.

வார இறுதியில் வெளிவரும் பத்திரிகைகளில் அரசை மோசமாக விமர்சிக்கும் கட்டுரைகளை நிறைய காண முடியும். ஆனால் இவற்றுக்கு ஏதும் நடப்பதில்லை என அவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாக நடைபெற்ற யுத்தம் 2009ஆம் நிறைவடைந்த பின் அவசரகால சட்டத்தை நீக்கியுள்ள இலங்கை அரசு, நம்பிக்கை நிறைந்த புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை 7 ஊடகவியலாளர்கள் உட்பட 9 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதை அடுத்து, சில அரச எதிர்ப்பு இணையத்தளங்கள் மூடப்பட்டன. இதனையடுத்து, கொழும்பு பலத்த விமர்சனத்துக்குள்ளாகியது.

ஊடக நிறுவனங்களுக்கு தொல்லை கொடுப்பதை இலங்கை நிறுத்த வேண்டும் என கோரும் மனித உரிமை அமைப்புக்களுடன் சனிக்கிழமை அமெரிக்காவும் இணைந்து கொண்டது.

அந்தரங்களை பாதுகாத்தல், நற்பெயரை பாதுகாத்தல் என்ற வகையில் பொலிஸாரின் நடவடிக்கை நியாயமானது என பீரிஸ் ஜப்பானில் செய்தியாளர்களிடம் கூறினார்.

## பஜாஜ் வாகனங்களின்...(தொடர்)

பஜாஜ் ஓட்டோ நிறுவனத்தின் உற்பத்திகளில் 5-7 சதவீதமானவை இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முச்சக்கர வாகனங்களின் விலை 10 சதவீதத்தினாலும் இரு சக்கர வாகனங்கள், அவற்றின் தயாரிப்பு வகை அடிப்படையில் 5-14 சதவீதத்தாலும் குறைவடையும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்நிறுவனத்தின் பிரதான சந்தைகளில் ஒன்றாக இலங்கை விளங்குகிறது. அந்நிறுவன ஏற்று மதிகளில் 17-18 சதவீதம் இலங்கைக்கே அனுப்பப்படுகின்றன. அதன் மொத்த உற்பத்தி யில் 5-7 சதவீதம் இலங்கையில் விற்பனை செய்யப்படுகிறது. இலங்கையில் தீர்வை அதிகரிக்கப்பட்டபின் இலங்கைக்கான அதன் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்திருந்தது.

இவ்விலை குறைப்பை மேற்படி நிறுவனமும் முகவர்களும் பகிர்ந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதன் விகிதாசாரம் குறித்து அறிவிக்கப்படவில்லை.

இவ்விலை குறைப்பை பஜாஜ் ஓட்டோ நிறுவனத்தின் சர்வதேச செயற்பாடுகள் தலைவர் ராகேஷ் சர்மா உறுதிப்படுத்தினார்.

# தமிழக மீனவர்கள் தடுத்துவைப்பு மன்மோகனை தலையிட வேண்டுகோள்

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பில் தலையிடுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம், தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார். அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் உள்ளாவதை தடுத்து நிறுத்தக் கோரி கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி தங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தேன். ஜூலை மாதம் 2ஆம் திகதி தமிழக மீனவர்கள் மீதான மேலும் இரு சம்பவங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி இராமேஸ்வரத்தின் முகுந்தராயசத்திரத்திலிருந்து ஒரு படகில் 3 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். இவர்கள் புகையில் உற்பத்திகளை கொண்டு செல்வதாக குற்றஞ்சாட்டி, கற்பிட்டிக்கு அருகில் இவர்கள் படகுடன் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைக்காக இவர்கள் நீர்கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

மேலும், இயந்திரப் படகு ஒன்றில் 5 பேர் இராமேஸ்வரத்தில் மீன்பிடிக்கச் சென்றபோது அவர்களின் படகு கச்சதீவு அருகில் தரைதட்டி நின்றது. தரைதட்டி நின்ற இந்தப் படகையும் 5 மீனவர்களையும் மீட்பதற்காக 5 பேருடன் மற்றுமொரு படகு சென்றது. 2 படகுகளுடன் இந்தப் 10 பேரும் இலங்கைக் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் தீர்வு குறித்து...(தொடர்)

ரியோடி ஜெனிரோ மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்தேன். அப்போது இந்த பிரச்சினை தொடர்பாகவும், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு அமைத்து கொடுப்பதற்காக இலங்கை அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவரிடம் பேசினேன்.

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்கு உள்ளேயே தகுந்த அரசியல் தீர்வுகாண தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். அதுதான் இலங்கை தமிழர்கள் கௌரவமான வாழ்க்கை வாழவும், சொந்த வீட்டில் வசிப்பது போன்ற உணர்வை பெறவும் போதுமான நடவடிக்கையாக அமையும் என்றும் தெரிவித்தேன்.

இவ்வாறு அந்த கடிதத்தில் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

## யாழ்.ஆஸ்பத்திரி...(தொடர்)

கொள்ளும் மக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டே நீதிமன்றம் மேற்படி தடையுத்தரவை விதித்தது.

போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைப்பாடுகள், டாக்டர் ஜெயக்குமாரின் வீடு தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணை, வெளிநோயாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டமை உள்ளிட்ட பல விடயங்களுக்குக் கண்டனம் தெரிவித்து இந்த அடையாளப் பணிப் பகிஷ்கரிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றம் விதித்த இடைநிறுத்தக் கட்டளையை மீறி ஆர்ப்பாட்டம் மற்றும் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் தேவையான பலத்தைப் பிரயோகித்து அவர்களைக் கலைக்குமாறும் பொலிசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஆட்கடத்தல் இரு...(தொடர்)

இலங்கை அகதிகளை படகு மூலம் அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவிற்கு அழைத்துச் செல்ல இவர்கள் இருவரும் முயற்சி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியல் குற்றச்...(தொடர்)

தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், இது ஜனாதிபதியால் தனித்து எடுக்கக் கூடிய தீர்மானமல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் 27 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அக்கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டே இது விடயத்தில் தீர்மானமொன்று எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

## இலங்கை விமானப்...(தொடர்)

உண்மையாக இருக்குமானால் அப்படி பயிற்சி அளிப்பது கண்டிக்கத்தக்கது. பயிற்சிக்கு வந்தவர்களை உடனடியாக மத்திய அரசு திருப்பியனுப்புவதே சரியாக இருக்கும் என்றார்.

# வடமராட்சியில் மனைவியால் கணவன் வன்முறைக்குள்ளாகும் நிகழ்வுகளும் உள்ளன!

## சட்ட நூல் வெளியீட்டு விழாவில் பருத்தித்துறை நீதிபதி திருமதி நந்தசேகரன்

"பல பகுதிகளிலும் குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. வடமராட்சியில் மனைவியால் கணவன் வன்முறைக்குட்படுத்தப்படும் நிகழ்வுகளும் உள்ளன" என்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் குறிப்பிட்டார்.

"சட்டத்தரணி சபா. இரவீந்திரனின் சட்ட நூல்கள் பொதுமக்கள் மத்தியில் சட்டம் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றன. தமிழில் சட்ட நூல்கள் குறைவாக இருக்கும் இக்காலகட்டத்தில் இந்த நூல்கள் சமூகத்திற்கு அரிய பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. நூலாசிரியர் மேலும் சட்டநூல்களை எழுதி சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டும்" என்றும் நீதிபதி திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரன் குறிப்பிட்டார். சட்டத்தரணி சபா இரவீந்திரனின் (பாதுகாப்பு) (குடும்பவன்முறைச் சட்டம்) சட்டநூல் வெளியீட்டு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். விழா பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அதிபர் கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. நூலின் முதற் பிரதிகளை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியகலாநிதி செல்வி. வி.சர்மிளா, கனடா திருமதி எஸ்.நிர்மலா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மாவட்ட நீதிபதி திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

மக்களுக்கு நீதியை வழங்கி, அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றங்களின் முக்கிய பொறுப்பாகும். இதற்குப் பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொதுமக்களிடம் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இச்சட்ட விழிப்புணர்வுகள் மூலம் நாட்டில் குற்றச் செயல்களைக் குறைத்துக் கொள்ள முடியும். மக்களின் வாழ்க்கையும் வளம் பெறும். மக்கள் சட்ட நூல்களை வாசிக்க வேண்டும்.

சட்டத்தரணி சபா. இரவீந்திரன் சீதன வீடு, தேச வழமைச் சட்டம், பராமரிப்புச் சட்டம், பாதுகாப்பு குடும்ப வன்முறைச் சட்டம் ஆகிய நான்கு சட்ட நூல்களை இலகு தமிழில் தந்துள்ளமைவரப் பிரசாதமாகும். இந்நூல்களை அனைவரும் வாசித்து சட்ட அறிவுகளை பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது.

இறைவன் இயற்கையாகவே பல வேறுபாடுகளுடன் பெண்களைப் படைத்துள்ளார். அதன் அடிப்படையிலேயே பெண்கள் செயற்பட வேண்டும். மனைவி, கணவனுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அப்போதுதான் குடும்பம் நல்ல முறையாக அமையும். வீட்டில் சம உரிமைப் போராட்டம் நடாத்தி, குடும்ப வன்முறைகளை ஏற்படுத்தி, குடும்பத்தைச் சீர்குலைக்கக் கூடாது. பெண்கள்தான் ஆண்களைப் பாதுகாக்க வேண்டும். பிரச்சினைகள் ஏற்பட்டால் சட்டங்கள் மூலம் முடிவு காணலாம்.

சட்டத்தரணி பி.குமாரசாமி குடும்ப வன்முறைச் சட்டம் பற்றி உரையாற்றினார். பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் சிறப்புரையாற்றினார்.

நூலாசாரியர் சட்டத்தரணி சபா. இரவீந்திரன் ஏற்புரையில் குறிப்பிட்டதாவது:-

குடும்பவன்முறைத் தடுப்புச் சட்டம் என்றால் என்ன என்பதைப் பலரும் இன்றுவரை சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. குற்றவியல் சட்டத்திற்கும், குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்திற்கும் இடையே வேறுபாடு கூட தெளிவாக வகைப்படுத்தப்படாமையால் பொது மக்களிடம் மட்டுமல்ல கற்றுத் தேர்ந்த கல்விமான்களிடமும் ஐயப்பாடு நிலவுகிறது. மக்கள் அறிந்தும் தெரிந்தும் வைத்திருக்க வேண்டிய சட்ட விடயங்கள் சிலவற்றை சாதாரண தமிழில் தந்துள்ளேன் என்றார்.

## யாழ்.ஸ்ரான்லி கல்லூரியில் நாளை பொருளியல் கருத்தரங்கு

2012 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு நாளை சனி மற்றும் மறுநாள் ஞாயிறு தினங்களில் (ஏழு, எட்டாம் திகதிகள்) யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி-வரை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வே.ஞானசாந்தன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரை வழங்கவுள்ளார்.

பரீட்சை எதிர்பார்ப்புகள் கட்டமைப்பு மற்றும் பல்தேர்வு வினாக்கள், சமகால பொருளாதார போக்குகள், நிகழ்வுகள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இக்கருத்தரங்கில் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட முன்னோடி வினாத்தாள் மற்றும் விடைகள் பற்றியும் அதிலுள்ள தவறுகள் திருத்தங்கள் பற்றியும் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் விடையளிப்பதற்குக் கடினமாகவுள்ள வினாக்கள் மற்றும் தமக்கு எழும் சந்தேகங்களை எழுத்து மூலமாக முதல் நாள் கருத்தரங்கில் சமர்ப்பித்தால் அவற்றுக்கான விடை-கள் மற்றும் தீர்வுகள் பற்றிய கருத்துரை இரண்டாம் நாள் கருத்தரங்கில் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடையுமாறு அதிபர் வே.ஞானகாந்தன் கேட்டுக் கொள்கின்றார்.

## டெங்கு ஒழிப்புக்கு இந்த வருடம் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

டெங்கு நோய் ஒழிப்புக்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இதற்காக இந்த வருடத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை ஒழிக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

டெங்கு நோய் பரவி வருவது தொடர்பில் ஐ.தே.க. எம்.பி. ஜயந்த கருணாதிலக முன்வைத்த ஒத்திவைப்பு பிரேரணைக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

டெங்கு நுளம்பு தொடர்பான பிரச்சினை எமது நாட்டில் மட்டும் பிரச்சினையல்ல, உலகில் 1/3 பங்கு மக்கள் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். டில்லியில் தினமும் 200 பேர் இறக்கின்றனர். மலேசியாவில் சுகாதார அதிகாரிகள் மட்டுமன்றி பொது மக்களும் டெங்கு ஒழிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எமது வலயத்தில் டெங்கு பரவுவதை மட்டுப்படுத்திய நாடாக இலங்கை காணப்படுகிறது. சிங்கப்பூரில் டெங்கு குடம்பிகள் இருந்தால் குறித்த வீட்டு உரிமையாளர் உடன் கைது செய்யப்படுகிறார். எமது அரசு டெங்கு ஒழிப்புக்குரிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மட்டங்களில் டெங்கு தொடர்பில் ஆய்வு. செய்யப்பட்டது. 50 வீதமான நகர பிரதேச நோயாளிகளுக்கு நோய் அறிகுறி எதுவுமின்றியும் கூட நோய் ஏற்படுகிறது. இந்த வருடத்தில் 300 மில்லியன் ரூபா நிதியினை டெங்கு ஒழிப்புக்காக ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார்.

டெங்கு நோயாளிகள் அதிகமாக வரும் ஆஸ்பத்திரிகளில் விசேட பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவையான மருந்துகள், உபகரணங்கள், வழங்கப்பட்டுள்ளன. டெங்கு மரண வீதம் 0.3 வீதமாக குறைந்துள்ளது. டெங்கு பரவும் வீதமும் 0.8 இல் இருந்து 0.14 ஆக குறைந்துள்ளது. முப்படையைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2 வாரத்தில் டெங்கு நோயாளர் தொகை பெருமளவு குறைந்துள்ளது. டெங்கு நோய் ஒழிப்பிற்கு சகலரதும் ஒத்துழைப்பு தேவை. டெங்கு ஒழிப்புக்கு உதவுமாறும் ஆளும் எதிர்தரப்பு எம்.பிக்கள் அனைவருக்கும் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளேன்.

## யாழ். குருநகரில் கடைகள் உடைத்துத் திருட்டு

யாழ்.குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மூன்று கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இக்கொள்ளைச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.குருநகர் - றெக்கிளமேஷன் வீதி, தண்ணீர்தாங்கி வீதி, மவுண்கார்மேல் வீதிகளில் உள்ள பிரபல கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலையில் விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு தொடர்கிறது. கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இதேவேளை பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஏற்றுக்கொண்டதாகவும் அவர் தமது கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு விளக்கவுள்ளதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் நிர்மல் தேவசிறி கூறினார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் தேவசிறி இவ்வாறு கூறினார்.

களனி மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது எனவும் தமது கோரிக்கைகள் ஏற்கப்படும்வரை பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



### கிளமென்ட் இம்மானுவேல்

(மணி)

யாழ்ப்பாணம், பாசையூரைச் சேர்ந்த கிளமென்ட் இம்மானுவேல் (மணி) கடந்த இரண்டாம் திகதி மாலை 5.00 மணியளவில் தமிழ்நாடு கும்மிடுபூண்டியில் காலமானார்.

இவரின் நல்லடக்கம் இந்தியாவில் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்றது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

## இலங்கை வங்கியின் கிளைகள் திறப்பு

இலங்கை வங்கியின் நீடித்த கரும பீடங்கள் மூன்று யாழ்ப்பாணத்தின் மருதங்கேணி, மந்திகை, கரணவாய் போன்ற பகுதிகளில் கடந்த புதனன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் இ.தர்மராஜா தலைமையில் நடைபெற்ற மருதங்கேணி கிளை திறப்பு விழாவினை பிரிகேடியர் எஸ்.டபிள்யூ.குலதுங்கவும் மந்திகை இலங்கை வங்கி கிளையினை பொது முகாமையாளர் தர்மசிறியும், தெல்லிப்பழை கரணவாய் கிளையினை கலாநிதி காமினி விக்ரசிங்க ஆகியோரும் திறந்து வைத்தனர்.

## போசாக்கு கண்காட்சி

யாழ்ப்பாணம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இன்று காலை எட்டு மணிக்கு சுகாதார திணைக்களத்தினரின் போசாக்கு கண்காட்சி நடைபெறவுள்ளது.


இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

## உயிரிழந்த கைதியின் பிரேத பரிசோதனை நேற்று நடந்தது

ராகமை வைத்தியசாலையில் உயிரிழந்த தமிழ் சிறைக்கைதியின் பிரேத பரிசோதனை நேற்று நடைபெற்றது.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதியொருவர் ராகமை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இதேவேளை அண்மையில் வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக கடந்த மாதம் 29 ஆம் திகதி மகர சிறைச்சாலைக்கு இந்த கைதி மாற்றப்பட்டிருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# யாழ்.மகாஜனாக் கல்லூரிக்கு 1.35 மில்லியன் ரூபா உதவி





யாழ்.மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளில் ஒன்றான தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு 1.35 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெருமதியான பாடசாலை உபகரணங்கள் இராணுவத்தினரின் உதவியுடன் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கான 300 கதிரைகள் 300 பாடசாலை மேஜைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான 25 கதிரைகளுடன் 25 மேஜைகள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி அங்கு உரையாற்றும் போது எமது நாட்டில் இலங்கைத் தமிழர்கள் இலங்கை முஸ்லிம்கள் இலங்கை சிங்களவர்கள் என்று ஒரு இனமில்லையென்றும் இருப்பவர்கள் இலங்கையர்கள் மட்டுமென்றும் குறிப்பிட்டார். அத்துடன் இந்தத் தகவலை இளம் சமுதாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

தேசமான்ய கென் பாலேந்திரா அவர்களின் நிதி உதவியுடன் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இராணுவ வீரர்களால் 24 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டிடமொன்று தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டது.

இக்கட்டடமானது படை வீரர்களால், மதிப்பீட்டு நிதியை விட குறைந்த செலவில் நிர்மாணிப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. அதன் பின்னர் மீதமான நிதியில் பாடசாலைக்கு வேறு உதவிகள் செய்து தருமாறு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்ற தேசமான்ய கென் பாலேந்திரா அவர்கள் இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அகில இலங்கை சைவ மாநாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு (2012) இம்மாதம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ்.நீராவியடியில் அமைந்துள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாநாட்டுப் பெருந்தலைவராகக் கலந்துகொள்ளும் சென்னை பேராசிரியர் வை.இரத்தினசபாபதி 20 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் நாள் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்.

இரண்டாம் நாளாகிய 21ஆம் திகதி 9.00 மணிக்கு ஆரம்பமாகும் காலை நிகழ்வு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையிலும், 4.00 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வு சைவபரிபாலன சபை உப தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையிலும் இடம்பெறும்.

மூன்றாம் நாளாகிய 22ஆம் திகதி 9.00 மணிக்கு காலை நிகழ்வு பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணன் தலைமையிலும், 4 மணிக்கு மாலை நிகழ்வு சைவ பரிபாலன சபை தலைவர் சிவநெறிப்புரவலர் த.சண்முகலிங்கம் தலைமையிலும் இடம்பெறும்.

மூன்று நாள் பெருவிழாவாக நடைபெறவிருக்கும் அகில இலங்கை சைவ மாநாட்டின் சிறப்பம்சங்களாக உரையரங்கம், சிறப்புரை, பண்ணிசை, சங்கீத கதாப்பிரசங்கம், நாட்டிய நாடகம் என்பன இடம்பெறவிருக்கின்றன. (க)

---

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அலட்சியம்:

## 88 ஆண்டுகளில் பல நாடுகள் மறைந்துவிடும்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தாவிட்டால் கடல் மட்டம் 2100ஆம் ஆண்டில் ஒரு அடி அதிகரிக்கும். 2300ஆம் ஆண்டில் சுமார் 5 அடி அதிகரிக் கும் என்றும் பீதி கிளப்புகின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள்.

புவி வெப்பம் உயர்வு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் உள்ளிட்ட பல காரணங்களால் கடல் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாக கூறபபடுகிறது. இந்நிலையில், பருவநிலை மாறுபாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அமெரிக்காவின் தேசிய வளிமண்டல ஆய்வு மையம் ஒரு ஆய்வு நடத்தியது. ஆராய்ச்சி மற்றும் இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி விஞ்ஞானிகள் கூறியதாவது:

இயற்கை மற்றும் மனித இடர்பாடுகளால் பருவநிலையில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பருவநிலை மாறுபாடுகள், தொடர்ந்து அதிகரித்து வரும் புவி வெப்பம், இதனால் பனிப்பாறை மற்றும் பனிப்படலங்கள் வேகமாக உருகுதல், கிரீன் ஹவுஸ் வாயுக்கள் அதிகம் வெளியாவது, ஓசோன் படலத்தில் ஓட்டை உருவாவது போன்றவற்றால் மனித இனம் மட்டுமின்றி கடல் வாழ் உயிரினங்கள் உள்பட சகல ஜீவராசிகளும் பாதிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதிப்பு, பருவநிலை மாற்றம் ஆகியவை காரணமாக 1980ஆம் ஆண்டில் இருந்ததைவிட புவி வெப்பம் 2010 இல் 0.17 டிகிரி செல்சியஸ் அதிகரித்திருப்பதாக பல்வேறு ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பனிப்பாறைகள், பனித்தீவுகள் உருகுவதால் 2005ஆம் ஆண்டில் இருந்து சராசரியாக ஆண்டுக்கு 2.3 மில்லிமீட்டர் என்ற அளவில் கடல் மட்டம் உயர்வதாகவும் தெரிகிறது. தொடர்ந்து கடல் மட்டம் உயரும் பட்சத்தில் கரீபியன் தீவுகள், மாலத்தீவு, ஆசிய பசுபிக் தீவுக்கூட்டங்கள் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் மூழ்கிப் போகும் அபாயம் இருக்கிறது.

---

## செய்மதி தொலைபேசி பறிமுதல் இலங்கை வாலிபர்கள் கைது

செய்மதி தொலைபேசி வைத்திருந்த இலங்கை வாலிபர்களை, சென்னை கியூ பிரிவு பொலிசார் கைது செய்தனர். சென்னை புழலில் இலங்கை அகதிகள் முகாமில் மோகன், சுரேஷ் ஆகியோர் தங்கியுள்ளனர். இவர்கள், சக அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு, கள்ள தோணியில் அனுப்புவதாகக் கூறி, ஆறு லட்ச ரூபாய் வசூலித்தனர். பணத்தை வசூலித்தவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பாமல் ஏமாற்றினர்.

இதுகுறித்து, பணத்தை இழந்தவர்கள், கியூ பிரிவு பொலிசில் புகார் அளித்தனர். புழல் அகதிகள் முகாமில் கியூ பிரிவு பொலிஸ், நேற்று முன்தினம் இரவு திடீர் சோதனை நடத்தினர். அதில், இலங்கை அகதிகள் சுரேஷ், மோகன் ஆகியோரிடம் இருந்த, "செய்மதி தொலைபேசி"யைப் பறிமுதல் செய்தனர்.

ஆந்திராவில் உள்ள அவர்களது கூட்டாளிகளிடம் இருந்து கள்ள தோணியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பிறகு, இலங்கை வாலிபர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

---

## புழல் அகதிகள் முகாமிலிருந்து ஆஸி. செல்ல முயன்றவர்கள் கைது

புழல் அகதிகள் முகாமில் சில இளைஞர்கள் அவுஸ்திரேலியா செல்ல எடுத்த முயற்சியின் போது, கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக முகாமில் எழுந்த அசாதாரண நிலைமை அனைவரையும் கவலை அடைய செய்துள்ளது. அவுஸ்திரேலியா ஜுரம் தற்போது அனைவரையும் ஆட்டிப்படைக்கிறது. இதனால் சில இளைஞர்கள் புழல் அகதிகள் முகாமில் இருந்து வெளியில் சென்று அதற்கான வேலைகளில் ஈடுபட்ட போது பொலிசாரால் கைது செய்யப்பட்டார்கள்.

---

## நாடு திரும்பவுள்ள இலங்கை மீனவர்கள்

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் பத்துப் பேர் நாடு திரும்பவுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் திருகோணமலை மீன்பிடி துறைமுகங்களில் இருந்து இந்த மீனவர்கள் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கடலுக்குச் சென்றிருந்தனர். கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை நேற்றும் 11 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் இரண்டு படகுகளும் அந்த நாட்டின் பொறுப்பில் உள்ளதாக கடற்தொழில் அமைச்சு குறிப்பிடுகின்றது.

---

## கழுகுக் கண்கள்

பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் சிறுவர், சிறுமியர் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிய செய்திகளைப் பார்த்தும், வாசித்தும் வேதனை அடைந்த நான், மனம் குழப்பம் அடைந்த நிலையில் ஆகாயத்தில் உயரப் பறந்து கொண்டிருந்தேன்.

பூமியைக் குனிந்து பார்த்தபோது சில காமுகர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகி மரணித்த பிள்ளைகளின் பிரேத ஊர்வலங்களை பார்த்து கண்கலங்கிப் போன நான், பூமியைப் பார்ப்பதைவிட ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்பது நல்லதென்று நினைத்தேன்.

எனக்கு மிகவும் கூர்மையான, எத்தனை மைல் தூரத்தையும் தெளிவாக பார்க்கும் கண்கள் இருக்கின்றன. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த நான் பறந்துகொண்டிருந்த இடத்தில் இருந்து சுமார் 5 கிலோமீற்றர் உயரத்தில் பல செய்மதிகள் பூமியை வலம் வந்து கொண்டிருப்பதை அவதானித்தேன்.

இந்தச் செய்திமதிகளில் பல காலநிலையை அறிவிப்பதற்காகவும், இரகசிய இராணுவத் தகவல்களை பெறுவதற்காகவும் சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்படும்போது கூடிய விரைவில் அபாய எச்சரிக்கையை பூமிக்கு அனுப்புவதற்காகவும் விண்வெளியில் இருந்து செய்மதிப் படங்களை அனுப்புவதற்கும் பயன்படுத்துகின்றன.


தற்போது நாம் வாழும் உலகை சூழ்ந்து சுமார் 900 செய்மதிகள் பயணித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றில் 381 செய்மதிகள் எந்நேரமும் ஒரே ஸ்தானத்திலேயே நிலை கொண்டிருக்கின்றன. இந்தச் செய்திகளைப் பார்த்துக் கொண்டு கவலையை மறந்த நிலையில் நிம்மதியாகப் பறந்து கொண்டிருந்த எனக்கு 1957 ஆம் ஆண்டின் சோவியத் யூனிய் ஸ்புட்னிக் என்ற முதலாவது செய்மதியை விண்வெளிக்கு அனுப்பி வைத்தது ஞாபகம் இருக்கிறது.

அதையடுத்து இன்னுமொரு செய்மதி லைக்கா என்ற நாயை சோவியத் யூனியன் விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இந்த நாய்க்கு 40 நாட்கள் உயிர் வாழ்வதற்கு போதியளவு உணவும் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தது. 40 ஆவது நாளில் லைக்கா தனது இறுதி உணவை உட்கொள்ளவிருந்தது. இறுதி உணவில் சோவியத் விஞ்ஞானிகள் ஒரு நொடிப் பொழுதில் எவ்வித வேதனையும் இன்றி லைக்காவை மரணிக்கச் செய்யும் ஒரு விஷயத்தை கலந்திருந்தார்கள். அதனை உண்டு லைக்கா அன்றைய தினம் உயிர் நீத்தது.

பொதுவாக ஒரு விண்வெளிச் செய்மதியின் ஆயுட்காலம் 15 ஆண்டுகளாலம். இந்த யோசனையுடன் நான் சீனாவுடன் கூட்டு முயற்சியில் விண்வெளிக்கு அனுப்பும் செய்மதிகளை தயாரிக்கும் சுப்ரிம் செட் என்ற இலங்கை நிறுவனத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அதன் நிர்வாகப் பணிப்பாளரின் பெயர் ஆர்.எம்.மணிவண்ணன். அவரது நிறுவனம் சீனாவின் கிரேட் வோல் கோப்ரேசன் அரச உடமை நிறுவனத்துடன் இணைந்து செய்மதிகளை தயாரிக்கும் பணியில் கூட்டாக ஈடுபட்டு வருகின்றது.

இதற்கென திரு.மணிவண்ணன் நிறுவனம் மொத்தம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்திருக்கிறது. விண்வெளியில் பறந்து கொண்டிருக்கும் செய்மதிகள் உலகிலுள்ள 44 நாடுகளுக்கே சொந்தமாக இருக்கின்றன. இலங்கைக்கும் ஓரிரு வருடங்களில் ஒரு விண்வெளியை சொந்தமாக வைத்திருப்பதற்கு வகை செய்யும் எண்ணத்துடன் தமது நிறுவனம் ஒரு செய்மதியை இப்போது சீனாவில் தயாரித்து வருகிறதென்றும் விண்வெளி செல்வதற்கு இலங்கையின் விண்வெளி தொழில்நுட்பத் துறையில் பயிற்சி பெற்ற இளைஞர்களை தெரிவு செய்து சீனாவில் பயிற்சிகளிக்கப் போவதாகவும் கூறினார்.

இவ்விதம் பயிற்சி பெறும் ஒரு இலங்கையின் விண்வெளி வீரர் இன்னும் 4 ஆண்டுகளுக்குள் விண்வெளிக்குச் செல்லும் வாய்ப்பை பெறுவார் என்று மணிவண்ணன் உறுதியாக அறிவித்தார். விண்வெளிக்கு செய்மதியை அனுப்புங்கள். அதன் கன்னிப் பயணத்தை நான் ஆகாயத்தில் பறந்து கொண்டே அவதானிப்பேன் என்று மணிவண்ணனிடம் கூறிப் பயணத்தை ஆரம்பித்தேன்.



# இணையத்தின் ஆளுகைக்குள் அனைவரும்


அள்ள அள்ளக் குறையாமல், அதிகரித்துக் கொண்டே இருக்கும் அட்சய பாத்திரம் இணையம். அறிவின் கருவிகளை மக்களிடம் எளிதாகக் கொண்டு சேர்த்ததில் இணையத்தின் பங்கு அளவிட முடியாதது. தகவல்களை யும் அறிவு சார்ந்த எல்லா விவரங்களையும் ஒரு சொடுக்கில் கிடைக்கச் செய்தது மட்டுமல்ல, அறிவுத் தேடலையும் அறிவு சார்ந்த விவாதங்களையும் ஜனநாயகப்படுத்தி யது இணையமே. யாரும் எதைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம் விவாதிக்கலாம் என்பது உலக அளவில் இன்று நடை-பெற்று வருவது இணையத்தின் உதவியாலே என்றுதான் சொல்ல வேண்டும்.

**இந்த வேகத்தின் பலன் உலகமே விரல் நுனியில் என்ற உறுதியைப் பலருக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் குறுகிய வட்டத்திற்குள் உழன்று கொண்டிருந்தவர்கள் உலக மக்களில் பலர் தங்களைக் கவனிப்பார்கள் என்ற திடத்தோடு செயல்படுகிறார்கள். மக்களின் குரல்களுக்கு இத்தனை வலு மனித குலம் தோன்றிய நாளிலிருந்து இருந்ததில்லை.**

ஒரு நண்பர் சொல்கிறார் பல வருடங்க ளுக்கு முன்னால் நான் பக்ரா நங்கல் அணைக்கட்டைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது Coffer dam (காப்பணை) என்ற சொற்றொடரை அணையைப் பற்றி எழுதியிருந்த விவரப் பலகையில் படித்தேன். ஊழகககநச னயஅ என்றால் என்ன வேறு சிலரிடம் கேட்டுப் பார்த்தேன். சரியான பதில் கிடைக்கவில்லை. பிறகு நூலகத்திற்குச் சென்று படித்த பிறகுதான் காப்பணை என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது." இன்று கைப்பேசியில் தட்டினால் போதும். விவரங்களின் கூட்டம் நம்மைச் சூழ்ந்துகொள்ளும். இணையம் நடத்திக் கொண்டிருக்கும் இந்தப் புரட்சியின் பரி-மாணங்களை நம்மால் அளவிட முடியாது. நாம் அதன் நடுவில் இருக்கிறோம்.

இணையத்தின் நன்மைகள் பலமுறை, பல இடங்களில் பட்டியலிடப்பட்டுவிட்டன. என்னைப் பொறுத்தஅளவில் காகிதத்தில் வரிந்து வரிந்து எழுதுவது வேகமாக மறைந்து வருகிறது என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் உறுதிபெற்று வருவதை இணையத்தின் ஒரு நன்மை எனலாம். இன்று பெரும்பாலான அலுவலகங்களில் காகிதம் கை துடைப்பது மேசை துடைப் பதற்கே பயன்படுகிறது. கையால் எழுதுவது என்பது அநேகமாக மறைந்துவிட்டது. மின்னஞ்சல்கள் பறக்கும் வேகத்தில் வேலையை உடனுக்குடன் செய்ய வேண்டிய கட்டாயம். தள்ளிப் போடுவது சாத்தியமல்ல. சில வருடங்களுக்கு முன்னால் அலுவலகங்களில் தாள் வெள்ளத்தில் தினமும் நீந்திக் கரைசேர வேண்டிய கட்டாயம். இன்று தாள் போக்குவரத்து வெகுவாகக் குறைந்து விட்டதாகக் கேள்விப்படுகிறேன். தாள் வெள்ளம் குறைந்து கொண்டு வருவது மரங்களின் ஆயுட் காலத்தை அதிகப்படுத்தும் என்ற நம்பிக்கையும் இன்று வலுப்பெற்று வருகிறது.

இணையத்தின் மற்றொரு நன்மை அதன் அதிசயத்தக்க வேகம். இந்த வேகமே பலரின் தயக்கத்திற்கு மாற்று மருந்தாக இருக்கிறது. இணையத்தின் வரவிற்கு முன்பு, எழுதியதை அனுப்புவதா வேண்டாமா என்ற தயக்கம் அஞ்சல் பெட்டியில் கையை நுழைத்துக் கடிதத்தைப் போடும் வரை இருக்கும். இன்று எழுதியவுடன் பதிவு விசையில் கை தெரியாமல் பட்டால்கூடப் போதும். எழுதியது சேர வேண்டிய இடத்திற்குச் சென்றுவிடும். இந்த வசதி தமிழில் புதிய எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியிருக்கிறது. இசை மேதைகளின் எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்திருக்க றிறது. குறிப்பாக, பாடினால் கல்லடி விழும் என்று முன்னால் பயந்துகொண்டிருந்தவர்கள் இன்று துணிச்சலோடு பாடி இணையத்தில் பதிவு செய்துவிடுகிறார்கள்.



இந்த வேகத்தின் பலன் உலகமே விரல் நுனியில் என்ற உறுதியைப் பலருக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் குறுகிய வட்டத்திற்குள் உழன்றுகொண்டிருந்தவர்கள் உலக மக்களில் பலர் தங்களைக் கவனிப்பார்கள் என்ற திடத்தோடு செயல்படுகி றார்கள். மக்களின் குரல்களுக்கு இத்தனை வலு மனித குலம் தோன்றிய நாளிலிருந்து இருந்ததில்லை.

கணினியில் பாட்டுகளையும் படங்களையும் இறக்கிக் கொள்ளலாம் என்பதையோ கணினியின் மூலம் பொருட்களை வாங்கலாம் என்பதையோ கணினி வந்த புதிதில் நம்மால் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்க முடியாது. இந்தத் துறையில் தொழில்நுட்பம் வளர்ந்த வேகம் இணையத்தின் வேகத்திற்கு நிகரானது. இந்த நூற்றாண்டின் முதல் இரண்டு ஆண்டுகள் வரை இணையம் மின்னஞ்சல் அனுப்புவதற்கும் தளங்களில் உலாவுவதற்கும் தான் முக்கியமாகப் பயன்பட்டுக் கொண்டிருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இணையம் நம்மிடம் விளைவித்த இன்னொரு மாற்றம் ஆண் பெண் உடல் சார்ந்த மர்மங்கள் எல்லாம் விடுபட்டுப்போனதுதான். பெண்களிடம் தங்கள் உடல் சார்ந்து இருந்த சில இறுக்கங்கள் வேகமாகத் தளர்ந்து வருகின்றன. நாளைய சமூகம் ஆண் பெண் உறவுகளைப் பார்க்கும் விதம் நமது இப்போதைய பார்வையிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கும் என்ற நம்பிக்கையைத் தந்திருப்பது இணையம். இந்த நம்பிக்கை தொலைக்காட்சித் தொடர்களில் திரும்பத் திரும்பக் காட்டப்படும் பெண்ணை ஒடுக்கும் வழிமுறைகளைத் தகர்த்துப் பொடியாக்கும் சம்மட்டியாக ஆக வேண்டும்.

உலக அரசியலில் ட்யுனிசியாவில் ஆரம்பித்து ர்'யாவரை மக்கள் ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிராகப் போராட உறுதுணையாக நிற்பது இணையமும் அதில் செயல்படும் மின்னஞ்சல், முகநூல், ஆர்குட், ட்விட்டர், யூ ட்யூப் போன்ற சாதனங்களே. அரசுகள் மக்களுக்காக இயங்க வேண்டிய நிலைமை உலகம் முழுவதும் உருவாகிக்கொண்டிருக்கிறது. இதற்காக நாம் இணையத்திற்கு நன்றி சொல்ல வேண்டும்.

இணையத்தைப் பயன்படுத்துபவர்களில் பலருக்கும் இருக்கும் ஷஷதங்களுக்குத் தெரியாதது ஏதும் இல்லை" என்ற ஆணவம் இந்த அபாயத்தை வலுப்படுத்துகிறது. அறிவைக் கூர்மையாக்கும் சாதனங்களைத் தேட அதிக முயற்சி எடுக்க வேண்டிய கட்டாயம் இல்லாததால், தேடாமலே காலத்தைத் தள்ளி விடலாம் என்ற முடிவை இவர்களில் பலர் எடுக்கிறார்கள். இந்த முடிவு அறிவுச் சோம்பேறித்தனத்தை வளர்க்கிறது. இந்த வியாதி பரவுவது அறிவியல் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கும்.

இணையத்தின் தயவால் உலகெங்கும், போலி அறிவாளிகள் பலர் உலாவி வருகிறார்கள். பத்திரிகைகளில் வெளிவரும் பெரும்பாலான படைப்புகள் இணையத்திலிருந்து திருடப்பட்ட கட்டுரைகளின் மொழிபெயர்ப்புகளே. எனினும் இதனால் வாசகர்களுக்கு நல்ல வி'யங்கள் போய்ச் சேர்கிறது என்பதால் மகிழ்ச்சியடையலாம். இணையத்தால் உலகிற்கு ஏற்படக்கூடிய மற்றொரு அபாயம் மதங்களில் பெயரால் இயங்கும் தளங்கள். மனப்பிறழ்வின் விளிம்பிலும் அதற்கு அப்பாலும் நின்று கொண்டிருப்பவர்கள் இந்தத் தளங்களில் எழுதுபவை நாம் நினைப்பதைவிட அநேகரைச் சென்றடைகின்றன.

இணையத்தைப் பயன்படுத்துவர்களில் 25 சதவீதத்தினர் (சுமார் 50 கோடி பேர்) மதம்சார்ந்த தளங்களைப் பார்வையிட்டிருக்கின்றனர். இவர்களில் 67 சதவீதத்தினர் தங்கள் மதம் சார்ந்த தளங்களுக்கும் 50 சதவீதம் மற்ற மதங்கள் சார்ந்த தளங்களுக்கும் சென்றிருக்கின்றனர் என ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. மதங்களின் பெயரால் இணையத்தில் செய்யப்படும் நச்சுப் பிரச்சாரங்களை ஒழிக்கவோ குறைக்கவோ எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இன்றுவரை தோல்வியே அடைந்திருக்கின்றன ■

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## வவுனியா தமிழ்க் கைதியின் மரணம் உண்மை என்ன?

வவுனியா சிறைச்சாலையிலிருந்து மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதியொருவர் மரணமடைந்துள்ளார். வவுனியா, நெலுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற 28 வயது வாலிபரே மரணமானவராவார். கடந்த 29ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்த சிறைக் கைதிகள் பொலிஸாராலும், சிறைக் காவலர்களாலும் மோசமாகத் தாக்கப்பட்டனரெனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருகிறது. அனுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதியொருவரை மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு இடமாற்றுமாறு கோரி 28 தமிழ்க் கைதிகள் வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். "அனுராதபுர நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட கைதிக்கு வழக்கு இருப்பதால் அவரை அடிக்கடி வவுனியாவிருந்து அனுராபுர நீதிமன்றுக்கு அழைத்து வர வேண்டிய தேவை இருந்தது. ஆகவேதான் வசதி கருதி அனுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றினோம்" என்று சிறைக்காவலர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுர சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 210 தமிழ்க் கைதிகளில் 28 பேர் மட்டுமே மேற்படி கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். உண்ணாவிரதிகளின் கோரிக்கைக்கு இணங்க சிறைக்காவலர்கள் மறுத்தனர். இதற்கிடையில் மூன்று சிறைக்காவலர்களை உண்ணாரவிரதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் மட்டுமே பணயக் கைதிகளை விடுவிப்போமென்றும் உண்ணாவிரதிகள் அடித்துக் கூறினர்.

நாற்பது மணித்தியாலங்களுக்கு மேலாக மூன்று சிறைக் காவலர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த நிலையிலேயே அவர்களை விடுவிப்பதற்காகத் திடீர் அதிரடி நடவடிக்கையைப் பொலிஸாரும், சிறைக்காவலர்களும் மேற்கொண்டனர். அதுவும் பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக உண்ணாவிரதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை பயனளிக்காததாலேயே அதிரடி மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதென்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்தோடுதான் உண்ணாவிரதிகள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையும், கைதி நிமலரூபனின் மரணத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த மூன்று சிறைக் காவலர்களையும் விடுவிப்பதற்குக் குறைந்த பட்ச பலாத்காரத்தைப் பாவிப்பதற்கான அனுமதி பொலிஸாருக்கு உண்டு. ஆனால் இங்கு குறைந்த பட்ச பலாத்காரம் பாவிக்கப்பட்டதா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ் சாட்டுவது போலக் கைதிகள் அடித்து நொருக்கப்பட்டார்களா? என்பதே இங்கு எழுகின்ற கேள்வியாகும். அத்துடன் உண்ணாவிரதமிருந்த கைதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் நிகழ்ந்ததா என்பதும் ஆராயப்பட வேண்டும். ஏனெனில் சிறைச்சாலைக்குள் இருந்து 54 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்றைவை தேடுதல் நடத்திய சிறைக் காவலர்களால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. என்னதான் சொன்னாலும் கையடக்கத் தொலைபேசிகளை உள்ளே கொண்டு செல்வதற்கும், அவற்றை சிறைச்சாலைக்குள் பயன்படுத்துவதற்கும் 'உள் வீட்டுப் பிள்ளைகள்' சிலர் நிச்சயம் உதவியிருப்பார்கள் என்ற சந்தேகம் எழுவது நியாயமானது.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் குற்றச்சாட்டை சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மறுத்துள்ளார். இருதய நோய் காரணமாக ராகம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் கைதியே இறந்துள்ளார் என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறியுள்ளார். எது எப்படியிருந்தாலும் தமிழ்க் கைதியின் மரண விசாரணை சில உண்மைகளை வெளிக்கொணரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மரணத்துக்கான சரியான காரணத்தைக் கண்டறிவதற்குச் சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையை நடத்துவார். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை உண்மைகளை அம்பலத்துக் கொண்டு வரும். இந்தக் கைதியின் மரணத்தை அரசியல் இலாபம் தேடுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்துகிறதா? இல்லையா? என்பதும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதேவேளை, தமிழ்க் கைதிகள் மிருத்தனமாகத் தாக்கப்பட்டார்களா? இல்லையா? என்பதும் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

கைதிகள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டால், தட்டிக் கேட்கும் உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ம்ட்டுமல்ல, அனைவருக்குமே உண்டு. இந்தச் சம்பவத்துக்கு அரசியல் சாயம் பூச முயற்சி எடுக்கப்படும் என்பதை மறுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தடுத்து வைக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள். அரசைப் பொறுத்தவரை அவர்கள் பயங்கரவாதச் சந்தேக நபர்கள். அரசியல் வாதிகள் வேறு, ஆயுதம் தாங்கியவர்கள் அல்லது ஆயுதம் தாங்கியவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள் வேறு.

எந்த நாடும் தனது இருப்புக்குச் சவால் விடும் எந்த சக்திகளையும் பொறுத்துக் கொள்ளாது. இது உலக வியாபகமான விதி. தடுப்புக் காவல் கைதிகள் அமைதியாக உண்ணாவிரதமிருக்கவில்லை. சிறைக்காவலர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தது தவறு. பணயக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு பலாத்காரமாக தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முயர்சித்தது தவறு. அவர்களை விடுவிப்பதற்குக் குறைந்த பட்ச பலாத்காரத்தைப் பொலிஸார் பாவித்திருந்தால் அது தவறல்ல. பொலிஸாரையும், சிறைக்காவலர்களையும் உண்ணாவிரதிகள் தாக்கியிருந்தால் அதுவும் தவறு. மிருகத்தனமாக கைதிகள் தாக்கப்பட்டிருந்தால் அதுவும் தவறு.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# காணாமற்போன பெண்ணிலைவாதி செல்வி எங்கே?

"காணாமற்போன போன எம் செல்வங்கள் எங்கே?" என்ற தலைப்பில் நேற்று 'தமிழ் நாதம்' பத்திரி கையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் இறுதியில் செல்வி என்ற பெயர் கொண்ட பெண்ணிலைவாதி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். செல்வி வெறுமனே பெண்ணிலைவாதி மட்டுமல்ல, சர்வதேச விருது பெற்ற கவிஞர், எழுத்தாளர், அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகவும், அக் கிரமங்களுக்கு எதிராகவும் உரத்துக் குரல் கொடுத்த ஒரு மனிதாபிமானி.

யார் இந்தச் செல்வி? என்று கேட்டு எமக்குப் பல தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. அவள் இவள்தான்.



1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அவள் காணாமல் போனாள். வவுனியா, சேமமடு என்னும் கிராத்தில் பிறந்தவள். யாழ்.பல்கலைக் கழத்தில் 'நாடகமும் அரங்கியலும்' என்ற பட்டப் படிப்பின் இறுதியாண்டு மாணவி. பல்கலைக்கழக மாணவியாக இருந்தபோது, பல்கலைக்கழகத்துக்கு அருகில் அவள் தங்கியிருந்த வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டாள். அன்று போனவள், போனவள் தான். இன்றுவரை அவளைக் காணவில்லை. காணாமல்போன அவள் வெறும் செல்வி மட்டுமல்ல எங்கள் செல்வங்களில் ஒருத்தி.

அவள் காணாமல்போய் சில வருடங்களின் பின்னர். International Pen (சர்வதேச பேனா) என்ற அமைப்பு கவிதைக்கான சர்வதேச விருதினை அவளுக்கு வழங்கியது. அவளைப் பற்றி அந்த அமைப்பு வழங்கிய அறிமுகத்தில் கீழ்க் கண்டவாறு எழுதியது.

**"மரணத்தையோ அல்லது
சிறைவாசத்தையோ
கவிஞர்கள் எதிர்கொண்ட
போதும், அவர்கள்
மனிதனது மொழியைப்
பேசுகிறார்கள். கருத்துச்
சுதந்திரத்துக்கான
போராட்டத்துக்கு உருக்
கொடுக்கிறார்கள். மனித
உரிமைகளைப்
பாதுகாப்பதற்கும், அதற்காகப்
போராடுவதற்கும் உலகம்
தழுவிய முயற்சிகள்
இருந்தபோதிலும்,
மனிதனுடைய கௌவரத்தை
நேர்மையாகப்
பகிரங்கப்படுத்தும்
குரல்களுக்கான
அவமதிப்பும், கவிதைக்கான
அவமதிப்பும்
என்பது மனித
வாழ்வுக்கேயான அவமதிப்பாக
அநேகமாக வெளிப்படுகிறது"**

கவிதைக்கான சர்வதேச விருது செல்விக்கு வழங்கப்பட்டது. தமிழ்க் கவிஞையான செல்விக்கு விருது வழங்கிய அமைப்பு கார்ல்ஸ் வொர்த்தியால் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். மனிதம் என்ற சர்வதேச மொழியைப் பேசும் அந்த அமைப்பில் சர்வதேச எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாவலாசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பாகும்.

தங்களுடைய நம்பிக்கைகளுக்காவும், இலட்சியத்துக்காவும் எழுத்துத் தளத்திலும், கவிதைத் தளத்திலும் படைப்புகளை உருவாக்கியவர்களுக்கே 'சர்வ தேசப் பேனா' என்ற அந்த அமைப்பு விருதுகளை வழங்கி வருகிறது. செல்விக்கு விருது வழங்கப்பட்டபோது அந்த அமைப்பு செல்வி குறித்து வெளியிட்ட பிரசுரத்தின் இறுதி வரிகள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

**"மனித உடலுக்கும்
உயிருக்கும் மரியாதை
குன்றிப்போதல் மேலோங்கி
வரும் இந்த உலகில்,
பலியாகிப் போன மற்றும்
இன்னல்களுக்குள்ளான
சகல கவிஞர்களையும்,
இன்னும் நூற்றுக்கணக்கான
அறியப்படாத தனி
நபர்களையும் அங்கீகரிக்கும்
அதேநேரத்தில், இந்த
வருடத்துக்கான
விருதினை தமிழ்
கவிஞையான செல்விக்கு
வழங்குவதற்கு இந்த
அமைப்பின் தலைமைப்
பீடம் தீர்மானித்துள்ளது"**

செல்வி, நாடக நெறியாளர், நடிகை. 'தோழி' என்ற இதழின் ஆசிரியருமாவார். செல்வி எழுதிய நாடகங்கள் மற்றும் கவிதைகள் குறுகிய காலத்துக்குள்ளாகவே அவளைக் கனதியான படைப்பாளியாக உலகுக்குக் காட்டியது "பூரணி" என்ற பெண்கள் அமைப்பின் முக்கிய செயற்பாட்டளராகவும் திகழ்ந்தவள் செல்வி.

யாழ்ப்பாண சமூக அமைப்பில் யுத்தக் கொடூரங்களுக்குள்ளாகி வாடி, வதங்கிப்போன தாய்மார்களுக்காக அவள் குரல் கொடுத்தாள். இதனால் சமூகத்தில் நன்கு அறியப்பட்டவளாகவும், மதிக்கப்பட்டவளாகவும் திகழ்ந்தாள். 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுப்பில் செல்வியின் கவிதைகள் பல வெளிவந்தன. சிவரமணி என்ற பெண்ணிலைவாதியும், சமூகப் போராளியும், எழுத்தாளருமான ஒருவருடன் இணைந்து கவிதைத் தொகுப்பொன்றினைத் தமிழகத்தில் வெளியிட்டாள் செல்வி. தாமரைச் செல்வி பதிப்பகம் அதனை வெளியிட்டிருந்தது.

மன ஓசை, மண், அரங்கேற்றம் போன்ற தமிழகத்தைச் சேர்ந்த சிற்றிதழ்களிலும் செல்வியின் கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. நான்காவது பரிமாணம், ஓசை, சரிநிகர், திசை போன்ற இதழ்களிலும் செல்வியின் கவிதைகள் வெளிவந்தன. இவளின் கவிதைகள் சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

யாழ்.பெண்கள் ஆய்வு வட்டம், இலக்கிய வட்டம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் அவை போன்ற அமைப்புகளிலும் செல்வியின் குரல் ஓங்கி ஒலித்திருக்கிறது.

செல்வி தங்கியிருந்த வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டபோது அவள் வசமிருந்த கையெழுத்துப் பிரதிகள், கடிதங்கள் அனைத்தும் கடத்தல்காரர்களால் கொண்டு செல்லப்பட்டன.

கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல்போன ஆயிரக்கணக் கான எமது சகோதரிகளில் செல்வியும் ஒருத்தி. அவள் காணாமல்போய் இருபது வருடங்கள் கடந்து விட்டன. இன்னும்தான் அவளைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அவள் ஏன் கடத்தப்பட்டாள்? சாம்பிளுக்கு ஒன்று. 'விடை-பெற்ற நண்பனுக்கு' என்ற தலைப்பில் எம்மிடமிருந்து விடைபெற்ற செல்வி விடைபெறு முன்னர் எழுதிய கவிதை இது.

விடைபெற்ற நண்பனுக்கு
மின் குமிழ்கள் ஒளியுமிழ
நிலாவிலா வெப்பம் நிறைந்த
முன்னிராப் பொழுதில்
விரைவில் வருவதாய்
உன் நண்பனுடன்
விடைபெற்றாய்
உன்னிடம் பகிர எனக்குள்ளே
நிறைய விடயங்கள் உள்ளன
முகவரி இல்லாது
தவிக்கின்றேன் நண்ப

**எஸ்.அருளானந்தன்**

செழித்து வளர்ந்த
தேமாவிலிருந்து
வசந்தம் பாடிய குயில்களும்
நீயும் நானும் பார்த்து
இரசித்த கொண்டை கட்டிய
குரக்கன்கள் தமது
தலையை அசைத்தும்
எனது செய்தியை உனக்குச்
சொல்லும்

பருந்தும் வல்லூறும் வான-
வெளியை மறைப்பதாக
இறக்கையை வலிந்து
விரித்தன நண்பா
கோழிக் குஞ்சுகள்
குதறப்பட்டன
கூடவே சில கோழிகளும்

இந்தப் பருந்தின்
இறக்கையைக் கிழிக்க
எஞ்சி நின்ற குஞ்சுகள்
வளர்ந்தன
நடந்து நடந்து வலித்துப்
போகும் கால்களின்
மீது படியும் என்
மண்ணின் புழுதியை
முகர்ந்து.



# நெருப்பைத்தேடி!

நெருப்பை பெண்கள் அளவிற்கு ஆண்கள் நுட்பமாக அறிந்திருக்கவில்லை, ஆணிற்கு நெருப்பு என்பது வியப்பான ஒரு பொருள், அல்லது வெறும்பயன் பாட்டு பொருள். யாகத்தின் போது கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் முன்னமர்ந்து மந்திர உச்சாடனம் பொங்கி வழிய ஆண் நெருப்பை ஆராதனை செய்கிறான்,

பெண்களோ நெருப்பை ஸ்நேகபூர்வமாகப் பார்க்கிறார்கள், பலவேளைகளில் நெருப்போடு பேசுகிறார்கள், சமையலுக்கு கை கொடுக்கச்சொல்லி கூப்பிடுகிறார்கள், நெருப்பு வராமல் புகை மட்டுமே எழும்போது திட்டுகிறார்கள். விளக்கில் எரியும் நெருப்பிற்கும் அடுப்பில் எரியும் நெருப்பிற்கும் உள்ள பேதம் அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது, நெருப்பின் குரலை அவர்கள் அறிந்திருக்கிறார்கள், அவர்கள் குரலை நெருப்பும் அறிந்திருக்கிறது.

மனிதர்களுக்கும் நெருப்பிற்குமான உறவு மிக நீண்டது, பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியது, மனிதன் கைவசப்படுத்திய உலகின் விந்தையான பொருள் நெருப்பே.சமீபத்தில் Quest for fire என்ற திரைப்படத்தை பார்த்தேன், நியான்டர்தால் மனிதர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றியது, ஒரு இனக்குழுவிடமிருந்து இன்னொரு இனக்குழு நெருப்பைத் திருடுவதற்காக எப்படி முயன்றது, நெருப்பைத் தேடி அலைந்த குகைமனிதர்களின் வாழ்க்கைபாடுகளே படத்தின் ஆதாரக்கதை, மிக முக்கியமான படமது, படத்தில் வசனங்கள் அதிகமில்லை, இயற்கையான ஒலிகள், விசித்திரமான ஓசைகள், இவையே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன,

நெருப்பை திருடிச்செல்பவன், அது தண்ணீரில் நனைந்து அணைந்து போன உடன் கருகிய கட்டையை முகர்ந்து பார்த்து அழும் ஒரு காட்சியிருக்கிறது, அது நம் முன்னோர்களின் அழுகைக்குரல், அடிவயிற்றில் இருந்து எழும் ஒலம், நெருப்பைத் திருடி செல்வதற்காக செல்லும் ஒரு கூட்டம் ஒரு இடத்தில் தற்செயலாக ஒரு பெண்ணைப் பார்த்து விடுகிறார்கள், உடனே தனது வேலையை மறந்து அவளை வன்புணர்ச்சி செய்கிறார்கள்.

அது போலவே பசியோடு அலையும் குகைவாசி தொலைவில் மான்கள் மேய்வதைக் கண்டதும் தன்னை அறியாமல் எச்சில் ஒழுக வாயை அசைக்கிறான், மனதில் மான் இறைச்சியின் ருசி உருவாகிறது, சாக்லெட்டைப் பார்க்கும் குழந்தை போல இருக்கிறது அவனது முகம், மான்கள் ஓடத் துவங்குகின்றன, அவன் அதைத் துரத்துகிறான், பசியோடு வெறியோடு அவனது ஓட்டம் வினோதமாக இருக்கிறது

இன்னொரு இடத்தில் சிறுத்தையிடம் தப்பி மரத்தில் ஏறி ஒளிந்து கொள்கிறார்கள் மூன்று குகைவாசிகள், சாப்பிட எதுவும் கிடைக்கவில்லை, மரத்தின் இலைகளை கொஞ்சம் கொஞ்சமாக பிடுங்கி சாப்பிடத் துவங்கி மரமே மொட்டையாகி விடுகிறது, சிறுத்தை காலடியில் இரவில் அழகான நிலவும் நட்சத்திரங்களும் இருக்கின்றன, பயத்தோடு அதை ரசிக்கிறார்கள்

ஒரு இடத்தில் புகைவருவதைக் கண்டு அங்கே நெருப்பு கிடைக்குமெனப் போகிறார்கள், அங்கே சாம்பல் மட்டுமே குவிந்திருக்கிறது, அச்சாம்பலில் புரண்டு உடல் முழுவதும் பூசிக் கொண்டு அவர்கள் ஆடும் களியாட்டத்தைப் பார்த்த பிறகு தான் சாம்பல் எவ்வளவு முக்கியமானது என்பதை என்னால் நன்றாக உணர முடிந்தது

அதிலும் நரமாமிசம் உண்ணும் குழுவினருக்கும் நரமாமிசம் உண்பதை தவறு என்று விலக்கும் குழுவிற்குமான போராட்டமும், வழித்துணையாக கிடைத்த பெண்ணை அடைய முயலும் வெறியும், அதே பெண்ணிற்காக ஒருவன் கொள்ளும் பரிவும், முடிவில் அவள் கர்ப்பிணியாவது என்று படத்தின் ஊடாக ஆதிமனிதன் பெண்ணை வென்ற கதையும் இருக்கிறது காட்சிப்படுத்தபட்ட விதமும், ஆதிமனிதர்களின் மன நிலையை சித்தரிக்கும் முறைகளும், உணர்ச்சி வெளிப்பாடும் அபாரமான கலைத்திறனுடன் வெளிப்பட்டிருக்கிறது


1911ல் பெல்ஜியத்தில் வெளியான நாவலை மையமாகக் கொண்டு இந்தத் திரைப்படம் உருவாக்கபட்டிருக்கிறது. இந்த படம் சிறந்த அயல்மொழித் திரைப்படத்திற்கான ஆஸ்கார் விருது பெற்றிருக்கிறது

எண்பதாயிரம் வருடங்களுக்கு முன்னால் மனிதகுலம் நெருப்பைக் கைவசப்படுத்த மேற்கொண்ட போராட்டத்தின் கதையை இத்தனை சுவாரஸ்யமாக சொல்ல முடிந்திருப்பது படத்தின் வெற்றி,

படம் பார்க்கையில் ஏனோ ராகுல்ஜியின் வால்காவிலிருந்து கங்கைவரை நினைவில் வந்தபடியே இருந்தது, அந்தப் புத்தகம் படித்த நாட்களில் இது போன்று நானாக கற்பனை செய்து பார்த்திருக்கிறேன், அந்த கற்பனையின் நிஜ வடிவம் போலவே இப்படம் இருந்தது

நியான்டர்தால் மனிதர்களின் இயல்புகள், வாழ்க்கைச்சிக்கல்கள். மற்றும் மனிதன் நாகரீகமடைந்த வரலாற்றை அறிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம் இது ■

விமர்சனம்: எஸ்.ராமகிருஷ்ணன்




# இந்திய எல்லைக்குள் ஊடுருவிய மியன்மார் ராணுவ வீரர்கள் கைது

இந்திய எல்லைக்குள் அத்து மீறி நுழைந்த, மியன்மார் நாட்டு ராணுவ வீரர்கள் இருவரை, அசாம் ரைபிள் படையினர் பிடித்து, பொலிசாரிடம் ஒப்படைத்தனர். அவர்களிடம் இருந்து, ஏ.கே.47 ரக துப்பாக்கி, மாத இதழ் மற்றும் கைத்தொலைபேசி ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இந்தியாவில் மிசோராம் மாநிலத்தில், இந்தியா - மியன்மார் (பழைய பர்மா நாடு) நாட்டுக்கும் இடையே உள்ள சர்வதேச எல்லையில், 404 கி.மீ. தூரத்திற்கு, இந்திய அசாம் ரைபிள் படை வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்குள்ள சில்கிரிபாய் அருகே எல்லை கடந்து மிசோராம், சாம்பாய் மாவட்டம் நுகுர் கிராமத்தின் வழியே, மியன்மார் நாட்டு ராணுவத்தைச் சேர்ந்த, இரு வீரர்கள் ஆயுதங்களுடன் நுழைந்தனர். அவர்கள் அங்கிருந்த விவசாயியை மிரட்டி, முறைகேடாக ஒரு லட்சம் கியாத் (மியன்மார் நாட்டு கரன்சி) கேட்டனர். அப்போது அங்கு வந்த அசாம் ரைபிள் படை வீரர்கள் அவர்களைப் பிடித்தனர்.

அவர்களிடம் விசாரணை நடத்தியதில், அவர்கள் மியன்மார் ராணுவ வீரர்கள் என்பதும், அத்து மீறி இந்திய எல்லைக்குள் நுழைந்ததும் தெரிந்தது. பின்னர் அவர்கள் மிசோராம் சாம்பாய் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஏ.கே.47 ரக துப்பாக்கி, கைத்தொலைபேசி மற்றும் மாத இதழ் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

# பொலிஸ்-விசேட அதிரடிப்படை இணைந்து புதிய செயற்பாடுகள்

திட்டமிட்ட குற்றங்கள், ஒப்பந்த கொலைகள், போதைவஸ்து பாவிக்கும் குழுக்கள், வெகுஜன கொலைகள், வங்கி கொள்ளை, திருட்டு மற்றும் பாதாள உலக குழுக்களின் நடவடிக்கைகளைத் தடுக்க பொலிஸ் பிரிவினருக்காக தாம் விசேட உதவிகளை வழங்கவுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படைத் தளபதி டீ.ஐ.ஜி சந்திரசிறி ரனவன தெரிவித்தார்

நாடு முழுவதும் 61 பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம்கள் உள்ளதாகவும் எந்த நேரத்திலும் குற்ற அழிப்பு நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய வகையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட 8,000 கமாண்டோக்கள் இருப்பதாகவும், பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் ஐ.ஜி.பி என்.கே.இலங்கக்கோன் நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க பொலிஸ் பிரிவினருக்கு உதவக்கூடிய அனுமதியை தந்துள்ளதாகவும் ஒரு ஊடக மாநாட்டில் கடந்த திங்களன்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

தற்போது அதிகமான குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் இவற்றால் சிலவற்றைக் கையாள்வதில் கொள்ள பொலிஸ் பிரிவினரும் குற்ற விசாரணைப் பிரிவினரும் சிரமங்களை மேற்கொள்வதாவும் இந்த சந்தர்ப்பங்களில் பொலிஸ் பிரிவினருக்கான பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி இவ்வாறான குற்றச் செயல்களை இல்லாதொழிக்க தாம் திர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# பலஸ்தீன சுதந்திர நாடு உருவாவதற்கு இலங்கை ஆதரவு

## ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வலியுறுத்தல்

பலஸ்தீன மக்களுக்கு சுதந்திர நாடு ஒன்று உருவாகவேண்டும் என்பதனை இலங்கை ஆதரிப்பதுடன் பலஸ்தீனுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் முழுமையான அங்கத்துவம் கிடைக்கவேண்டும் என்ற அந்நாட்டின் கோரிக்கையையும் வரவேற்கின்றது என்று ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்துகொண்டுள்ள இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்த பிரதி மனித உரிமை உயர்ஸ்தானிகர்கியங் வா காங் பலஸ்தீனின் மனித உரிமை நிலைமை தொடர்பான அறிக்கை ஒன்றை பேரவையில் சமர்ப்பித்தார்.

இந்த கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட இலங்கை பிரதிநிதி மேலும் குறிப்பிடுகையில் பலஸ்தீன மக்கள் தொடர்ச்சியாக துன்பங்களை அனுபவித்துவருகின்றமை தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். அந்த வகையில் பலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பில் இதுவரை நிலையான தீர்வு ஒன்று கிடைக்காமை தொடர்பில் இலங்கை அதிருப்தி அடைகின்றது.

பலஸ்தீன் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள் இரு நாடுகளுக்கு இடையிலான சமாதான முயற்சிகளை பாதிக்கும் என்ற ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் கூற்றுடன் நாங்கள் இணைந்துகொள்கின்றோம். பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு இலங்கை ஆதரவு வழங்குவதுடன் அவர்களுக்கான சுதந்திர நாடு ஒன்றையும் ஆதரிக்கின்றது. மேலும் பலஸ்தீனுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் முழுமையான அங்கத்துவம் கிடைக்கவேண்டும் என்ற அந்நாட்டின் கோரிக்கையையும் வரவேற்கின்றோம் என்றார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் உரையாற்றிய பலஸ்தீன் நாட்டின் பிரதிநிதி சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மதிக்குமாறு அழுத்தங்களை மனித உரிமை பேரவை பிரயோகிக்க வேண்டும் என்றும் தொடர்ச்சியான தாக்குதல்கள் மற்றும் நிலை கொள்ளல் என்பனவற்றை இஸ்ரேல் நிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் 47 அங்கத்துவ நாடுகள் கலந்துகொள்வதுடன் இதில் உலக நாடுகளின் மனித உரிமை நிலைவரம் குறித்து கலந்துரையாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளி பயணத்தில் முதல் இலங்கை வீரர்

## சீனாவுடன் இணைந்து ஒப்பந்தம் கைச்சாத்து

இன்னும் 4 ஆண்டுகளுக்குள் விண்வெளிக்கு இலங்கையர் ஒருவரை அனுப்பி வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாம்.

இலங்கையின் தனியார் நிறுவனமான சுப்ரிம் சட், சீன அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப் பெரிய செய்மதிகளை தயாரிக்கும் கிரேட் வோல் கோப்பரேசன் நிறுவனத்துடன் இணைந்து ஒரு இலங்கை விண்வெளி வீரரை விண்வெளிக்கு அனுப்புவதற்கான ஒப்பந்தமொன்றில் சமீபத்தில் சீனத் தலைநகரமான பெய்ஜிங்கில் கைச்சாத்திடப்பட்டது. சுப்ரிம் சட் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஆர்.எம். மணிவண்ணன். தமது நிறுவனம் எமது நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கக்கூடிய வகையில் ஒரு செய்மதியை சொந்தமாக வாங்கக்கூடிய தகுதியை அடைந்திருப்பதாக சொன்னார். உலகிலுள்ள 44 நாடுகளுக்கே சொந்தமாக செய்மதிகள் இருக்கின்றன.

சில நாடுகள் மற்ற இரண்டு மூன்று நாடுகளுடன் இணைந்தே செய்மதிகளை சொந்தமாக வைத்திருப்பதாக அவர் சொன்னார்.

இலங்கைக்கு முழுமையாக சொந்தமாக இருக்கும் இந்த செய்மதி தயாரிப்பு பணிகள் இன்னும் இரண்டு ஆண்டில் தயாராகிவிடும் என்றும், இதற்கென தாங்கள் மொத்தம் 300 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்திருப்பதாக அவர் சொன்னார்.

# சூழலை சுத்தமாக வைத்திருந்து சுகாதாரத்தை பேணுவோம்



இந்நாட்டு மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்த சுகாதார அமைச்சு மட்டத்தில் விலை மதிக்க முடியாத பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு டெங்கு நுளம்புகளின் தாக்கத்தை இந்நாட்டிலிருந்து ஒழிப்பதும் தமது அமைச்சின் முக்கிய நோக்கமாக இருப்பதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**கேள்வி** : டெங்கு நோய் இன்று மக்களை வெகுவாக பாதிக்கின்றது. டெங்கு நோய்க் காரணிகளை ஒழிக்க சுகாதார அமைச்சு என்ன நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றது?

**பதில்** : தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமொன்றை கடந்த தினங்களில் நாம் பிரகடனப்படுத்தினோம். டெங்கு நுளம்பு மாத்திரமன்றி பொது மக்களுக்கு தீங்கு இழைக்கும் யானைக்கால், மலேரியா, ஜப்பானிஸ் என்சபலய்ட்ஸ் போன்ற நோய்களை உண்டாக்கும் சகல நுளம்புகளையும் ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை இவ்வாரத்தின் முக்கிய ஒரு விடயமாகும். தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தைமிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினோம். எமது உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று மக்களை அறிவுறுத்தி நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழித்தனர்.

2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 5 நுளம்பு ஒழிப்பு வாரங்களை அமைச்சு நடைமுறைப்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி டெங்கு செயற்பாட்டு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதோடு டெங்கு நுளம்புகளின் தாக்கத்தை பெருமளவில் கட்டுப்படுத்த எம்மால் முடிந்தது. சுகாதார அமைச்சோடு இணைந்த வகையில் பாதுகாப்பு, கல்வி, உள்நாட்டு, இளைஞர் அமைச்சுக்களும் இணைந்து இந்த செயற்பாட்டு அமைப்புக்கு சுமார் 10 அமைச்சுக்களின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. அதற்காக பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. தாம் வாழும் சூழலை சுத்தமாக வைத்திருப்பதனால் நுளம்புகளை மிக வெற்றிகரமாக ஒழித்து விடலாம்.

**கேள்வி** : ஒரு காலத்தில் டெங்கு நோயாளிகளின் தொகை கூடுகின்றது. இன்னும் சில காலங்களில் அதன் எண்ணிக்கை குறைகின்றது. இவ்வாறு டெங்கு நோயாளிகளின் தொகை குறைகின்ற போது இந்த டெங்கு நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று சிலர் குறைகூறுகின்றனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்** : இக்குற்றச்சாட்டை அமைச்சர் என்ற வகையில் நான் முழுமையாக நிராகரிக்கிறேன். ஏனென்றால் வருடம் முழுவதும் நாம் இத்தகைய நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். நோயாளர்கள் கூடிக் குறையுமட்டும் நாம் பார்த்துக் கொண்டிருப்பதில்லை.

**கேள்வி** : ஸ்ரீலங்கா திரிபோஷா கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் மேலதிக திரிபோஷ தொகையை அடுத்த 2 மாதங்களுக்குள் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக சுகாதார அமைச்சரான நீங்கள் குறிப்பிட்டீர்கள். மேலதிக திரிபோஷாவை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகிறார்கள் அல்லவா?

**பதில்** : எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் சொல்ல ஏதாவது தேவை தானே. அதனால் தான் தேவையற்ற விடயங்களை கூறிக் கொண்டு இருக்கிறர்கள். விசேடமாக திரிபோஷா பெற்றுக் கொடுப்பது கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறு பிள்ளைகளுக்கும் தான். குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் போஷாக்கின்மையை ஒழிக்கும் நோக்கத்தில் தான் திரிபோஷா பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நாட்டிலுள்ள அனைவருக்கும் திரிபோஷா சாப்பிட கொடுக்குமாறு கூறுகிறார்கள். அவ்வாறு செய்ய முடியாது தானே? குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் கர்ப்பிணிகளினதும் சிறு பிள்ளைகளினதும் சுகாதார பாதுகாப்புக்காக திரிபோஷா பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் நாம் உற்பத்தி செய்யும் திரிபோஷா அதிகரிக்கப் போகின்றது. அதை உலகத்திலுள்ள ஒரு வறிய நாட்டின் கர்ப்பிணிகளுக்கும் சிறு பிள்ளைகளினதும் போஷாக்கை அதிகரிக்கவும் நாம் இலவசமாக பெற்றுக் கொடுக்கப் போகின்றோம்.



**கேள்வி** : சுகாதார உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க வேலை நிறுத்தம் தொடர்ந்தும் வருகின்றது. இந்த வேலை நிறுத்தங்களை நிறுத்த அமைச்சு மட்டத்தில் எடுக்கப்படும் நடைமுறைகள் என்ன?

**பதில்** : சுகாதார உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க வேலை நிறுத்தம் ஒரு நாளும் முடிவடையப் போவதில்லை. தொழிற்சங்க தலைவர்களின் அதிகாரப் போராட்டங்களாக இந்தவேலை நிறுத்தங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். இந்நாட்டின் அரசியல் கட்சிகளுக்கு இருக்கும் அதிகார போராட்டத்தை விட சுகாதாரம் தொடர்பான தொழிற்சங்கங்களின் ஒரு அதிகார போராட்டம் இருக்கின்றது. தொழிற்சங்கத் தலைவர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந்த அனைத்து வேலை நிறுத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றது. தமது தொழிற்சங்கங்களின் அங்கத்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் ஏனைய தொழிற்சங்கங்களை வலுவிழக்கச் செய்யவும் அப்பாவி நோயாளிகளின் உயிரை பயணம் வைத்து நடத்தப்படும் இந்த வேலை நிறுத்தங்களை செயற்படுத்துவோருக்கு எப்போதாவது இயற்கையாகவே தண்டனை கிடைக்கும் என்று ஒரு புத்த சமயத்தவன் என்ற வகையில் நான் நம்புகிறேன்.

> “அரசியல்வாதிகள் அல்
> இவ்வகையில் விமர்சன
> பெருக்கம் அதிகரிக்கும்
> நாம் 365 நாட்களிலும் வரு
> ஒழிப்புத் திட்டங்களை
> தொடர்ச்சியாக செய்ற்
> நாடு முழு
> குழுக்கள் நாளாந்
> நடத்தி வரு

**கேள்வி** : தனியார் மருத்துவ கல்லூரிகளை ஆரம்பிப்பது தொடர்பான உங்கள் கருத்து என்ன?

**பதில்** : தனியார் நிறுவனங்களை விருத்தி செய்வது அரசாங்கத்தின் ஒரு கொள்கையாகும். தனியார் மருத்துவ கல்லூரிகளை ஆரம்பிப்பது தொடர்பாக எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஒரு மருத்துவக் கல்லூரி இருக்க வேண்டிய தரத்துக்கமைய முழுமையான ஒரு கல்லூரியாக காணப்பட மாட்டாது. உலகின் அனைத்து நாடுகளிலும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் அவை சிறந்த தரத்தில் இருக்கின்றன. கல்வியை சிறந்த வகையில் தரமான வகையில் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதனால் தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கும் போது அதன் தரம், சிறப்புத் தன்மை பற்றி கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**கேள்வி** : தேர்தலொன்று நடைபெறப் போவதாக கேள்விப்படுகிறோம். இது உண்மையா?

**பதில்** : எமது நாட்டுக்கு தேர்தல் அட்டவணையொன்றுள்ளது. ஜனாதிபதித்தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்றவாறு காலத்துக்குக் காலம் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. அடுத்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலொன்று நடக்க இருக்கின்றது. தேர்தலில் ஒரு வேறுபாடு ஏற்படுவதென்றால் முதலமைச்சரும், ஆளுநரும், ஜனாதிபதியும் கலந்தாலோசித்து தீர்மானிக்க வேண்டும். மாகாண சபை தேர்தலொன்றை நடத்துவது தொடர்பாக



அரசாங்கம் இன்னும் திகதிகளை தீர்மானிக்கவில்லை.

**கேள்வி :** முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை பெற்றார். ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களின் கீழ் பொன்சேகா அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட இந்த விடுதலை பற்றி உங்களது கருத்து என்ன?

**பதில் :** ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களின் கீழ்

அல்லது ஊடகத்தினால்
சனம் செய்வது நுளம்பு
போதுமட்டுமே. ஆனால்
வருடம் முழுவதும் நுளம்பு
ளை நாடு முழுவதும்
றப்படுத்தி வருகிறோம்.
ழுவதும் 120
ாந்தம் ஆய்வுகளை
வருகின்றன. ”

பொன்சேகா அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கப்பட்டது. அது அந்தளவு விசேட விடயமல்ல. உலக அரசியலை நோக்கும் போது இது அந்தளவு முக்கியமானதல்ல. அது ஒரு சாதாரண விடயம் தான். அமைச்சரவையிடம் கேட் டுத் தான் அவர் இத்தீர்மானத்தை எடுத்தார்.



**கேள்வி :** நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக உங்களால் என்ன கூற முடியும்?

**பதில் :** இந்த ஆணைக்குழு தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைக்க அரசாங்கத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரப்பட்டது. அதன்படி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாலும் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்த அறிக்கை தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துக்களும் பரிந்துரைகளும் இந்தக் குழு மூலம் நாம் அண்மையில் முன்வைக்க இருக்கின்றோம் ■

## முதியோருக்கு அடைக்கலமாகத் திகழும்

# கைதடி முதியோர் இல்லம்!

பொருளாதார மேம்பாட்டுக்காக இன்று எல்லோரும் தொழில் செய்தே ஆக வேண்டிய கட்டாய நிலை. இதனால் இன்று ஓய்வின்றி உழைப்பதையே பிரதான நோக்காகக் கொண்டு பலரும் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். வீட்டில் ஓய்வாக இருக்க அல்லது பிள்ளைகளை, தாய், தந்தையரைக் கவனிக்க நேரமின்றி பலரும் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள்.



ஊருக்கு ஊர் முதியோர் இல்லங்கள் உதயமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தென்மராட்சிப் பகுதியில் அமையப்பெற்றுள்ள கைதடி முதியோர் இல்லம் ஆதரவற்ற முதியவர்கள் பலருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. இங்கு 108 ஆண்கள், 82 பெண்கள் அடங்கலாக 190 பேருக்கு அடைக்கலம் கொடுத்து அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றது.

1952ஆம் ஆண்டு இம்முதியோர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்ட பின்னர் 1958ஆம் ஆண்டு உத்தியோக பூர்வமாக இயங்கத் தொடங்கியது. இங்கிருக்கும் முதியவர்கள் முக்கியமாக அன்பான அரவணைப்பையே எதிர்பார்க்கின்றனர். தாங்கள் வெளி மக்களுடன் கதைத்துப் பழக சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது இவர்களது அவாவாக உள்ளது. இங்குள்ள முதியவர்கள் கிடைக்கும் நேரங்களில் தமக்குத் தெரிந்த வேலைகளை முதியோர் இல்ல வளாகத்திலேயே செய்கின்றனர்.

இல்லத்தில் 30 மன நோயாளிகள் முதியோருடன் சேர்ந்து பராமரிக்கப்படுவதால் இங்கிருக்கும் முதியோர்களுக்கு இடையூறாக அமைகின்றது என்றும் இவ்வாறு அவர்களைப் பராமரிக்க மன நோயாளர் பராமரிப்பு நிலையம் ஒன்று இவ்வளாகத்தினுள் நிறுவப்படவுள்ளதாகவும் பணியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வில்ல மேற்பார்வையாளர்கள் மாதம் இரு முறை தம்மைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதாகவும் அது தமக்கு மகிழ்ச்சியாக இருப்பதாகவும் முதியோர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வதாகவும் எதிர்வரும் காலத்தில் வெளி இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

**மாதம் இரு முறை தம்மைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதாகவும் அது தமக்கு மகிழ்ச்சியாக இருப்பதாகவும் முதியோர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வதாகவும் எதிர்வரும் காலத்தில் வெளி இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.**

வட மாகாணத்தில் 90,070 பேர் முதியவர்களாக உள்ளனர். அவர்களைப் பராமரிக்க ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் பகல் பராமரிப்பு நிலையம் அமைக்க ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவகின்றதுடன். இவற்றைச் செயற்படுத்த மக்களும் அவர்களுக்கு துணைவர வேண்டும் ■

# சிறைச்சாலையில் நிலவும் நெருக்கடிகளை களைய செஞ்சிலுவைச் சங்கம் உதவும்

இலங்கையில் உள்ள சிறைச் சாலைகளின் கட்டமைப்பில் மாற் றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சிறை கூடங்களில் நிலவும் சன நெரிசல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும் இவற்றைத் தீர்ப் பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படு மெனச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைச் சிறைச்சாலைகளில் அதிகளவு கைதிகள் இருப்பத னால் இங்கு இட நெரிசல் காணப் படுகிறது இந்த நெரிசல் பிரச்சினை களுக்கு தீர்வு காண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

சிறை நெருக்கடியினால் பல்வேறு சிறைச்சாலை அதிகாரிகளும், கைதிகளும் பல்வேறு அசௌகரி யங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சிறைச்சாலைகளில் அதிகளவான கைதிகள் தடுத்து வைக்கப்பட் டுள்ளமை நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக் கப்படுகிறது.

இத்துடன் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களின் தரத்தை மேம்படுத்த தேவை யான உதவிகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

சிறைகளில் அளவுக்கு அதிக மான கைதிகளை தடுத்து வைத் திருப்பதனால், அவர்களுக்கு இடப் பற்றாக் குறை ஏற்படும் அத்துடன் பல்வேறு நோய்கள் ஏற்பட வதற்கு காரணமாக அமை கின்றது. இது மட்டுமல்லாமல் குழுக்களாகப் பிரிந்து மோதல் நடவடிக்கை யில் ஈடுபடல் போன்ற பல்வேறு பட்ட சிக்கல் நிலைமைகளை உருவாக் கும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளன.

# துண்டியில் விபத்து இருவர் படுகாயம்

வான் ஒன்றுடன் மோட்டார் சைக் கிள் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கொழும்புத்துறையில் இருந்து வந்த வான் ஒன்று சுண்டுக்குழி யில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் துண்டிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் மோதியதில், மோட் டார் சைக்கிளில் பயணித்த இரு வரே படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து சம்பவத்தில், கொழும்புத் துறையைச் சேர்ந்த அ.டொமினிக் சவியோ (வயது 32), எஸ்.அரியரட்ணம் (வயது 55) என்பவரும் காயம் அடைந்துள்ளனர்.

# குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு வேட்பாளர் அனுமதி வழங்க வேண்டாம்

## பெப்ரல்

குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க கூடாது என இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பெப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அதனடிப்படையில் நாட்டில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப்பொருள் வர்த்தகம், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் பெப்ரல் கோரிக்கை விடுத்துள்ளது. தேர்தலில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யும் பொறுப்பு மக்களிடமே உள்ளது இதனால் மக்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமெனவும் பெப்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்களிடத்தில் கல்வித் தகமை, அரசியல் நோக்கம், நன்னடத்தை மற்றும் சமூக அந்தஸ்து ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டு மக்கள் அவர்க ளுக்கு வாக்களிக்க வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இஸட் புள்ளி தொடர்பாக ஜனாதிபதி புதிய குழுவை நியமிப்பார்

இஸட் புள்ளிகளை மீளக் கணித்தல் தொடர்பாக, பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவை கண்காணிப் பதற்குப் பொறுப்பாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.ஓ.தாட்டில் தலைமை யிலான மூவர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிப்பார் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம தெரிவித்த கருத்துக்கு பதிலளிக் கும் முகமாக உயர்கல்வி அமைச் சர் எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு கூறினார். புதிய பாடத்திட்டத் திற் கும் பழைய பாடத்திட்டத் திற்கும் தனித்தனியாக இஸட் புள்ளி களை தயாரிக்குமாறு உயர் நீதி மன்றம் உத்தர விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த உத்தர வுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## மருதநகர் கிராமம்

# போஷாக்கு இன்மையால் கர்ப்பிணி பெண்கள் பாதிப்பு

வறுமை நிலை காரணமாக கிளி நொச்சி, மருதநகர் கிராமத்தை சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் போஷாக்கு இன்மையை எதிர் கொண்டுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் மீள்குடி யேறிய இக் கிராம மக்கள் அடிப் படை வசதிகள் மிகவும் குறைவ ான நிலையில் பல்வேறு சிரமங் கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராம மக்கள் அதிகமா னோர் கூலித் தொழிலையே ஜீவ னோபாயமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இக்கிராமத்தில் உள்ள கர்ப்பிணி தாய்மார் போஷாக் கான உணவுகளை பெற்றுக் கொள்வதில் பெரும் இடர்பாடுகள் உள்ளன. குறிப்பாக வேலை களுக்குச் செல்லும் கர்ப்பிணிப் பெண்கள் போஷாக்கு உணவ- ினை பெற்றுக்கொள்ள முடி யாமை வேலை பார்க்கும் இடங் களில் ஓய்வு பெறமுடியாமை போன்ற பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த போஷாக்கு இல்லாமை மற்றும் அதனால் கர்ப்பிணி பெண் கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட் டுள்ளது.

# கட்டடங்கள் அமைத்தல் சட்டவிதிகள்: யாழ். செயலகத்தில் கருத்தரங்கு

## மாநகர சபையினர் ஏற்பாடு

யாழ். மாநகர சபையின் ஏற்பாட் டில் கட்டிடங்கள் அமைப்பதற் கான சட்டவிதிகள் தொடர்பான விளக்கும் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

யாழ். மாநகர சபையின் ஆணை யாளர் பிரணவநாதன் தலைமை யில் நடைபெற்ற இக்கருத்தரங் கில் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாநகர சபை ஆகிய வற்றின் பௌதீகத் திட்டமிடல் பிரிவின் உத்திகோகஸ்தர்கள் கலந்துகொண்டு கட்டிடங்களை அமைத்தல், வடிகால்கள் அமைத் தல், நீர் விநியோகம் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படும் போது வரைதல், அனுமதிகள் பெறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இந்த கருத்தரங்கில் கட்டிட வரைபட கலைஞர்கள், நில அள வையாளர்கள் மற்றும் நகர அபி விருத்தி அதிகார சபை உத்தி யோகஸ்தர்கள், யாழ் மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். மத்திய கல்லூரியில் சொல்லாடல்

யாழ். மத்திய கல்லூரியில் எதிர் வரும் 9ம் திகதி சொல்லாடல் நிகழ்வு ஒன்று இடம்பெறவுள் ளது. யாழ்ப்பாணத்தின் பண் பாட்டை பதிவுசெய்வதில் முன் னணி வகிப்பவர் கே. டானியலா? செ. கணேசலிங்கனா? என்ற தலைப்பில் இச் சொல்லாடல் நிகழ்வு நடைபெறும்.

பிற்பகல் 2 மணியளவில் மத் திய கல்லூரியின் தம்பர் மண்ட பத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு டானியல் ஞாப கார்த்த கல்வி நிலையம் அனு சரணை வழங்குகிறது.

# ஸ்டான்லி வீதிக்கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்

எதிர்வரும் பத்தாம் திகதி செவ் வாய்க்கிழமை மானிப்பாய் வீதி 165 இலக்கத்தில் அமைந்துள்ள வணிகர் கழகக் கட்டடத்தில் கலந் துரையாடலொன்று நடைபெற வுள்ளது. ஆரியகுளம் சந்தியி லிருந்து கஸ்தூரியார் வீதி முடி வடையும் வரையிலான ஸ்ரான்லி வீதியில் உள்ள அனைத்துக் கடை உரிமையாளர்களையும் இக்கூட் டத்தில் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கம் அழைப்பு விடுத் துள்ளது.

# கவனயீனமாக வாகனம் செலுத்திய இருவருக்கு நீதிமன்றம் அபராதம்

கவனயீனமாக வாகனத்தைச் செலுத்திய இருவருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 9,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேசத்தில் பொலி ஸார் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோத னையின் போது குறித்த இரு வரும் லொறி மற்றும் பஸ் ஆகிய வற்றை கவனயீனமாக செலுத்தி யதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசார ணைக்கு எடுத்துக் கொண்ட நீதி பதி மா. கணேசராஜா பஸ் சார- திக்கு 4,000 ரூபாவும் லொறி வாகன சாரதிக்கு 5,000 ரூபா தண்ட பணத்துடன் 3 மாதத்திற்கு சாரதி அனுமதி பத்திரத்தினை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட் டார்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ். போதனா வைத்தியசா லைக்கு வடக்கு, கிழக்கு சமு தாய மீள் அபிவிருத்தித் திட்டத் தின் (நிக்கோட்) கீழ் 10 மில்லி யன் ரூபா பெறுமதியான வைத் திய உபகரணங்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை வழங்கப் பட்டதாக யாழ். போதனா வைத் தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை யின் மருத்துவத் தேவைகளுக் காக இவ் வைத்திய உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 16.6 மில்லியன் ரூபா பெறுமதி யான வைத்திய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்திய சேவைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிகரித்துச் செல்வதாகவும் வெளி நாடுகள் பல உதவிகளைச் செய் வதற்கு முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மதுரை - கொழும்பு விமான சேவை செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பம்

மதுரை - கொழும்பு நேரடி விமான சேவை எதிர்வரும் செப்டெம்பர் 1இல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மதுரை - இலங்கை இடையே மிகின் லங்கா ஏர் லைன்ஸ் நிறுவனம் செப்டெம்பர். 1ல் விமான சேவையை தொடங்குகிறது. கொழும்பில் இருந்து மதியம் 2.20 மணிக்கு புறப்பட்டு, மதுரைக்கு 3.20 மணிக்கு வரும். மதுரையில் இருந்து மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு 5.15 மணிக்கு கொழும்பு சென்றடையும்.,

திங்கள், புதன், வெள்ளி இயக்கப்படும். செப்டெம்பர், 1 முதல் சர்வதேச விமான சேவையை துவங்கும் முன் மதுரை விமான நிலையத்தில் குடிவரவு அலுவலகம் துவங்க நடவடிக்கை எடுக்கும்படி, மத்திய அமைச்சர் ப.சிதம்பரத் திடம் வலியுறுத்தப்பட்டது. என குறிப்பிட்டுள்ளார்.

## பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு:

# நகர சபை உறுப்பினர் உள்ளிட்ட ஐவருக்கு விளக்கமறியல்

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள தங் காலை நகர சபை உறுப்பினர் அங்ஜன லியனகே உள ளிட்ட 5 சந்தேகநபர்கள் எதிர்வரும் 17ம் திகதிவரை விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் நேற்று (05) தங்காலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

13 வயது சிறுமியை தங்காலை பகுதி ஹோட்டல் ஒன் றில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (04) சட்டத்தரணிகள் வழியாக தங்காலை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் நடவடிக்கை பிரிவில் சரணடைந்தனர்.அதன் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளை கூட்டமைப்பினர் நேரில் பார்வையிட்டனர்

வவுனியா சிறையில் இருந்து அநுராதபுரத்திற்கு மாற்றப் பட்டு அங்கிருந்து பின்னர் காயங்களுடன் மகர சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு தமிழ் சிறைக் கைதிகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் சுரேஸ் பிறேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பார்வை யிட்டுள்ளனர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச் சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக் கிழமை வவுனியா சிறையில் அடித்து உதைக்கப்பட்ட அரசியற் கைதிகள் பின்னர் அங்கிருந்து அனுராத புரத்திற்கு மாற்றப்பட்டு அங்கு மாலை பிற்பகல் 1 மணிய- ில் இருந்து இரவு 11 மணிவரை கடுமையாக தாக்கப் பட்டுள்ளனர் - என்றார்.

23. மனிதக் கண்ணின் விழித்திரை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது தவறானது?
(1) அது கண்ணில் காணப்படும் மிக உட்புறமான படையாகும்
(2) அதில் கூம்புகளை விட கோல்கள் அதிகளவில் காணப்படும்
(3) அதில் கூம்புகள் மாத்திரம் செறிவாக உள்ள இடம் அவல் எனப்படும்
(4) கூம்புகளை விட கோல்களே அதிகப் பார்வைக் கூர்மையுடையது
(5) கூம்புகள் பொடொப்சின் நிறப்பொருளை கொண்டிருக்கும் அதேவேளை கோல்கள் உரொடொப்சின் நிறப்பொருளைக் கொண்டிருக்கும்

24. முன்னிலை அசைவுகள் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது தவறானது?
(1) அவை தாவரங்களின் சிறத்தலடைந்த கட்டமைப்புகளில் நகழ்கின்றன.
(2) சில வளர்ச்சிப்பதார்த்தங்கள் அவற்றை சீராக்கி ஒழுங்காக்ககின்றன.
(3) அவற்றிற்கு ATP அவசியமில்லை
(4) அவை பொதுவான தூண்டல்களுக்குத் துலங்களாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திசைகளில் நிகழ்கின்றது
(5) அவை மீளக்கூடியவை

25. தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள் - அவற்றின் பங்களிப்பு என்ற கீழ்காணும் இணைப்புகளுள் எது தவறானது?
(1) ஒட்சின் - இலைகளில் வெட்டுப்படை உருவாதலை நிரோதிக்கும்
(2) கிபரலீன் - வித்து உறங்கு நிலையை நிரோதிக்கும்
(3) அப்சிசிக்கமிலம் - இலைவாய் திறந்தலைத் தூண்டும்
(4) சைற்றோகயனின் - இலைகள் மூப்படைவதை நிரோதிக்கும்
(5) எதிலீன் - பழங்கள் கனிவதைத் தூண்டும்

26. பிரியிழையம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது தவறானது?
(1) அவை வேர் உச்சிகளிலும், தண்டுச்சிகளிலும் காணப்படும்
(2) அவை வியத்தமடையாத கலங்களை உடையவை.
(3) இடைபுகுந்த பிரியிழையம் துணை உற்பத்தி உடையது
(4) கலன் மாறிழையம் முதல் உற்பத்தி அல்லது துணை உற்பத்தி உடையது
(5) சிறுகட்டு மாறிழையம் துணைவளர்ச்சியில் பங்கேற்கின்றது.

27. வெளிமரவைரம், உள்மரவைரமாக மாறும் போது
(1) கலன்களின் எண்ணிக்கை குறையும்
(2) அதன் இலிக்னின் உள்ளடக்கம் அதிகரிக்கும்
(3) கலன்கள் நொருக்கப்பட்டு அழிகின்றன.
(4) உயிர்க்கலங்களில் சுடரின் படிவதனால் அவை இறந்த கலங்களாக மாறும்.
(5) நீர் ஒதுக்க உணவு என்பவற்றின் அளவு அதிகரிக்கும்

28. அங்கிகளின் இனப்பெருக்கத்தின் சில அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஒரு பெற்றார் மாத்திரம் தேவைப்படும்
B - எச்சங்கள் பிறப்புரிமையியில் பெற்றாரிலிருந்து வேறுபட்டிருக்கும்
C - எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும்
D - இனவாக்கத்தில் உதவாது
E - புணரிகளின் சேர்க்கை நிகழும்
F - ஒடுக்கற்பிரிவு நிகழும்

இவற்றுள் இலிங்கமில் இனப்பெருக்கத்துக்குரிய அம்சம் / அம்சங்களாவன.
(1) A,B,C மாத்திரம் (2) B,D,E மாத்திரம் (3) A,C,D, மாத்திரம்
(4) A,D மாத்திரம் (5) A மாத்திரம்

29. தாவரங்களின் வாழ்க்கை வட்டங்கள் தொடர்பில் பின்வரும் எக்கூற்று தவறானது?
(1) Pogonatum வித்தித்தாவரம் ஈரிலிங்கத்துக்குரியது
(2) Nephrolepis புணரித்தாவரம் ஓரில்லமுள்ளது
(3) Selaginella ஆண்புணரித்தாவரத்தில் ஆண்கலவாக்கி காணப்படாது
(4) Cycas புணரித்தாவரங்கள் வித்தித்தாவரத்தில் முற்றாகத் தங்கிவாழ்கின்றன.
(5) வித்துமூடியுளி பெண்புணரித்தாவரம் விருத்தியாகும் முளையத்தை போசிப்பதில்லை

30. Zygomycota உறுப்பினர்கள்
(1) பிரிசுவருள்ள பல்கருகொண்ட பதியப் பஞ்சணவிழைகள் உடையன
(2) சில இயங்கு வித்திகள் மூலம் இனப்பெருக்கம் அடைகின்றன.
(3) பல்லின பிரிவிலியுண்மை உடையவை
(4) இலிங்க இனப்பெருக்கத்தின் போது கனியுடலங்களைத் தோற்றுவிக்கின்றன.
(5) சந்ததிப் பிரிவிருத்தியை காண்பிக்கின்றன.

இதன் தொடர்ச்சி அடுத்த வாரம் பிரசுரமாகும்.

இப்பத்திரிகை இன்போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 06.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

கல்வி ஒளி
தமிழ்நாதம்
06-07-2012
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 03

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2012

**1) பின்வரும் விவரணத்தை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சூரியனது பொற்கிரணங்களையும் சந்திரனையும் கண்சிமிட்டும் நட்சத்திரங்களையும் அசையும் வளியினையும் இரைச்சலிட்டு கரைவந்துபோகும் கடல் அலைகளையும் பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்களையும் இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவிகளையும் செழித்து வளர்ந்திருக்கும் மரங்களையும் அவற்றில் பழுத்த மணம் பரப்பும் கனிகளையும் சின்னப்பனித் துளிகளின் தூறல்களையும் மூச்சு விடும் உயிர்களையும் தாங்குவதே இயற்கை.

01. கனிகள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
02. 'இயற்கை' என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.
03. 'கீதம்' என்பதனை பன்மைச் சொல்லாக எழுதுக.
04. 'விரித்தது' என்ற சொல் எக்காலத்துக்குரியது.
05. இங்கு காணப்படும் உவமானத்தை எழுதுக.
06. பொற் கிரணங்கள்' என்பதன் கருத்து யாது?
07. இங்கு இன்னிசை கீதம் இசைப்பது எது?
08. படர்க்கை பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக.
09. இங்கு மரங்களில் பழுத்து மணம் பரப்புவது எது?
10. இவ் விவரணத்தில் வர்ணக் கீலம் ஒன்றை எழுதுக.

**2) பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**
01. நாட்டில் / போட்டிகள் / ஒலிம்பிக் / நடைபெறுவது / ஒரே / நவீன / இல்லை
02. என்றும் / கொள்கின்ற / சிறுவயதிலே / நினைத்து / கல்வி / பெற்றுக் / இருக்கும்.
03. கொண்டது / மிகவும் / நான் / பிறந்த / சூழல் / இயற்கை / அழகான / காட்சிகளைப்
04. முதுமொழி / கல்வி / என்பது / சிலையில் / இளமையிற் / எழுத்து
05. எழுந்து / நான் / மனஞ் / காலையில் / பாடலைப் / செய்தேன்.

**3) பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**
01. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
02. உப்பிட்ட வரை உள்ளளவும் நினை
03. பழகப் பழகப் பாலும் புளிக்கும்
04. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
05. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

**4) பின்வரும் பெண்பால் வாக்கியங்களை ஆண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**
01. அரசி அரண்மனைக்குச் சென்றாள்
02. அவள் சிறந்த ஓட்ட வீராங்கனை
03. எனது எசமானி நல்லவர்
04. தலைவி படைகளை நடத்திச் சென்றாள்
05. செல்வி கோயிலுக்குச் சென்றாள்

**5) பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துச் சொற்கள் எழுதுக?**

| | |
|---|---|
| 01. மண்: | 02. இம்மை: |
| 03. ஆக்கம்: | 04. பிறப்பு: |
| 05. வெயில்: | 06. காய்: |
| 07. மேடு: | 08. இரவு: |
| 09. இன்பம்: | 10. வெற்றி: |

6.பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக

| | |
|---|---|
| உரை: | உறை: |
| கரி: | கறி: |
| வளங்கள்: | வழிகள்: |

7.பின்வரும் அறிவித்தலை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அறிவித்தல் :

நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கலைமகள் மண்டபத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும் - அதிபர்

1. பரிசளிப்பு விழா நடைபெறுவது எப்போது?
2. எத்தனை மணிக்கு நடைபெறும்?
3. எந்த மண்டபத்தில் நடைபெறும்?

8.பின்வரும் மரபுத் தொடரின் கருத்தினை எழுதுக

1. வாட்ட சாட்டம்:
2. பொடி வைத்துப் பேசுதல்:
3. நுனிப்புல் மேய்தல்
4. தாளம் போடல்:
5. குரங்குப்பிடி:

9.பின்வரும் மரபுச் சொற்களைக் கையாண்டு வாக்கியத்தை பூரணப்படுத்துக.

( சொல்லும், இரையும், சீறும், அலறும், ஊளையிடும் )

1. குதிரை கனைக்கும் அதுபோல பூனை:
2. கிளி பேசும் அதுபோல ஆந்தை:
3. தேனீ ரீங்காரம் செய்யும் அதுபோல பல்லி:
4. காகம் கரையும் அதுபோல வண்டு:
5. புலி உறுமும் அதுபோல நரி:

10.பொருத்தமான மரபுச் சொற்களை வெற்றிடங்களில் எழுதுக.

1. களிறு யானையும் ...................................... யானையும் குளத்தில் நீர் பருகின.
2. கலைமான் முன்னே செல்ல ...................................... மான் அதனைப் பின் தொடர்ந்து சென்றது.
3. கடுவன் குரங்கும் ...................................... குரங்கும் மரங்களில் பழங்களைப் பறித்து உண்டன.
4. ...................................... கூவும் ...................................... கொக்கரிக்கும்.
5. ...................................... மாடு வண்டி இழுக்கும் ...................................... பால் தரும்.

11.பொருத்தமான சொல்லினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. மாணவர்கள் ............. வண்டியிற் சுற்றுலா சென்றார்கள். (பேருந்து, போரூந்து, பேரூந்து, போருந்து)
2. ............. நாடுகளில் தேயிலை நன்கு வளரும் (மழை, மளை, மாலை, மலை)
3. பஸ் வண்டி அந்தப் ............. கடந்து சென்றது. (பாளத்தைக், பலத்தைக், பளத்தைக், பாலத்தைக்)
4. பிள்ளைகள் ............. சரணாலயத்திற்குச் சென்றார்கள். (யாணைகள், யானைகள், யனைகள், யணைகள்)
5. நாங்கள் கொழும்பு ............. சென்றோம். (நகறுக்குச், நாகறுக்குச், நகருக்குச், நாகருக்குச்)



15.தாவரங்களின் தாங்கும் தொழிலைப் புரிவதில் சம்பந்தப்பட்ட சேர்வைகளினது சரியான தொகுப்பு பின்வருவனவற்றுள் எது?
(1) செலுலோசு, அரைச்செலுலோசு, பெத்தின்
(2) செலுலோசு, இலிக்னின், சுபரின்
(3) அரைச்செலுலோசு, பெத்தின், இலிக்னின்
(4) பெத்தின், இலிக்னின், சுபரின்
(5) செலுலோசு, அரைச்செலுலோசு, இலிக்னின்

16.மனிதனின் மண்டையோட்டில் காணப்படும் பின்வரும் என்புகளுள் சோடியானது எது?
(1) நுதல் என்பு (2) சுவரென்பு (3) பிடரென்பு
(4) ஆப்புப்போலி என்பு (5) நெய்யரியென்பு

17.விலங்குகளில் காணப்படும் வன்கூட்டின் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளது
(A) நீர்நிலையியல் வன்கூடு
(B) சுண்ணாம்பாலான புறவன்கூடு
(C) அகவன்கூடு
A,B,C ஆகிய வன்கூட்டு வகைகளை உடைய விலங்குகளின் சரியான ஒழுங்கு.
(1) நெமற்றோடா புழு, சிலந்தி, தவளை
(2) மண்புழு, நட்சத்திரமீன், மனிதன்
(3) அட்டை, முறுகைக்கள் விலங்கு, கடல்முள்ளி
(4) கடலட்டை, பூச்சி, கணவாய்
(5) மண்புழு, மரவட்டை, ஒட்டோபசு (Octopus)

18.தாவரங்களில் காணப்படும் சில போசனை முறைகள் / வகைகள் கீழே தரப்பட்டுள்ளது
A - ஒளித்தொகுப்புக்குரிய தற்போசனை முறை B - இரசாயனத் தொகுப்புக்குரிய தற்போசனை முறை
C - குறை ஒட்டுண்ணி முறை D - அழுகல்வளரி முறை E - பூச்சியுண்ணும் முறை
F - ஒரட்டிலுண்ணல் முறை
Loranthus என்னும் தாவரத்தில் காணப்படும் முறை / முறைகள் ஆவன,
(1) A,C,E மாத்திரம் (2)C,D,E மாத்திரம் (3)A,C,D மாத்திரம் (4)A,C மாத்திரம் (5)C மாத்திரம்

19.தாவரக் கனிப்பொருள் போசணை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது தவறானது?
(1) தாவர வேரினால் எல்லா வகை கனியுப்புக்களும் உயிர்ப்பான முறையில் அகத்துறிஞ்சப்படுகின்றன.
(2) மொலிப்தினம் தாவரங்களினால் அனயன் வடிவில் மாத்திரமே அகத்துறிஞ்சப்படுகின்றது
(3) நைதரசன், அனயன் வடிவிலும், கற்றயன் வடிவிலும் தாவரங்களால் அகத்துறிஞ்சப்படுகின்றது
(4) மக்னீசியம் பற்றாக்குறை ஏற்படும் போது தாவரங்களில் முதலில் இலம் இலைகளில் வெண்பச்சை நோய் ஏற்படுகின்றது.
(5) இரும்பு தாவரங்களில் ஒரு நுண்போசனை மூலகமாகும்

20.மனிதனில் இரைப்பை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது சரியானது?
(1) அது பிரதானமாக மூன்று பகுதிகளை உடையது
(2) அதன் உள்ளிடத்தில் Rugae எனப்படும் வட்ட மடிப்புகள் காணப்படுகின்றன.
(3) களம் நடுக்கோட்டில் இதய இரைப்பையில் திறக்கின்றது
(4) உணவு உட்கொண்ட பின்னர் வளி சேர்க்கப்படுவது குடல்வாய் இரைப்பையில் ஆகும்.
(5) அது எந்திரோகாசுத்தரன் என்னும் ஓமோனை உற்பத்தி செய்கின்றது

21.மனிதனின் சுவாசப்பைகள் காற்றூற்றப்படுவது தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது தவறானது?
(1) வெளிச்சுவாசம் உயிர்ப்பான அதேவேளை உட்சுவாசம் மந்தமானது
(2) வெளிச் சுவாசத்தின் போது பிரிமென்றகடு மேல் நோக்கி தள்ளப்படுகின்றது
(3) இதில் பழுவிடைத்தசைகளும், பிரிமென்றகட்டின் தசைகளும் பங்குகொள்கின்றன.
(4) இச்சைக்குரிய முறையில் கட்டுப்படுத்தப்படக்கூடியது
(5) மூளையின் காம்பினால் சீராக்கி ஒழுங்காக்கப்படுகின்றது

22.மனிதனில் காணப்படும் வாங்கிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
(A) பசினியின் துணிக்கை (B) மேக்கல் வட்டத்தட்டு (C) மிசுனரின் துணிக்கை
(D) குரோசின் குமிழ் (E) ரபினி அங்கம் (F) கோட்டியின் அங்கம்
இவற்றுள் எவை மனிதனின் தோலில் காணப்படும்.
(1) A,B,C,D மாத்திரம் (2) B,C,D,E மாத்திரம் (3) A,B,E,F மாத்திரம்
(4) A,B,D,E மாத்திரம் (5) A,B,C,D,E மாத்திரம்

9.A,B,C எனப் பெயரிடப்பட்ட மூன்று தாவரங்களின் சில சிறப்பியல்புகள் பின்வருமாறு.
(i) மூன்று தாவரங்களும் கலனிழையங்களைக் கொண்டிருக்கும்
(ii) யுஇட பல்லினவித்தியுன்மை உடைய அதேவேளை ஊ ஓரினவித்தியுண்மையைக் காட்டும்
(iii) B,C என்பவற்றில் வித்திகள் வித்திக்கலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் A யில் அவ்வாறு வெளியேற்றப்படுவதில்லை
(iv) A, C என்பவற்றின் பதிய இலைகள் ஒத்திருப்பதோடு B யில் அவற்றிலிருந்து வேறுபட்டிருக்கும்

A,B,C எனப் பெயரிடப்பட்ட தாவரங்கள் முறையே,
(1) Cycas, Selaginella, வித்துமுடியுளி
(2) Nephrolepiis, Cycas, Selaginella
(3) வித்துமுடியுளி, Nephrolepis, Selaginella
(4) Cycas, Selaginella, Nephrolepis
(5) விந்துமுடியுளி, Selaginella, Pogonatum.

10.சிவப்பல்காக்களுக்கும், கபில அல்காக்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகள் பின்வருவனவற்றுள் எவை?
A - தனிக்கல உருப்பினங்கள் கொண்டுள்ளமை
B - கடல்வாழிகளாக இருக்கின்றமை
C - கலச்சுவரில் ஏகர் (Agar) காணப்படுகின்றமை
D - குளோரோபில் - a இருக்கின்றமை
E - சவுக்குமுனையுள்ள இனப்பெருக்க கலங்களை கொண்டுள்ளமை
F - தட்டையான பிரிவிலியாக இருக்கின்றமை

(1) A,B,F மாத்திரம்
(2) B,D,E மாத்திரம்
(3) B,D,F மாத்திரம்
(4) B,D,E,F மாத்திரம்
(5) A,B,D,F மாத்திரம்

11.ஒரு நைடாரியா உறுப்பினர், ஒரு எக்கைனோடேர்மாட்டா உறுப்பினரிலிருந்து வேறுபடுவது,
(1) இருபக்க சமச்சீரான உடலை கொண்டிருப்பதனால்
(2) வாயைச் சூழ பரிசக்கொம்புகளைக் கொண்டிருப்பதனால்
(3) குதம் ஒன்றை கொண்டிராதபடியால்
(4) இடைத்தோற்படையை கொண்டிராதபடியால்
(5) புறக்கருக்கட்டல் வழக்கத்தை கொண்டிருப்பதனால்

12.இருசொற் பெயரீட்டு முறையின் போது,
(1) ஓர் இனம் அதன் சாதிப்பெயரினாலும் குடும்பத்தின் பெயரினாலும் பெயரிடப்படும்.
(2) பெயர்கள் ஆங்கிலத்தில் எழுதப்படும்
(3) முதற்சொல் ஒரு பெயர்ச்சொல்லாகவும், இரண்டாம் சொல் அதன் பெயரெச்சமாகவும் அமையும்
(4) இரண்டு சொற்களும் சிறிய ஆங்கில எழுத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்
(5) சுருக்கமாக எழுதும் போது இனத்திற்குரிய வேறுபடுத்திச் சொல்லினால் மாத்திரம் குறிப்பிடலாம்

13.தாவரங்களில் கொண்டுசெல்லல் தொடர்பாக பின்வருவனவற்றுள் எது தவறானது?
(1) தாவரங்களினுள் நீர் பிரசாரணம் மூலம் அசைவது புன்வெற்றிடப் பாதை வழியே மாத்திரம் ஆகும்.
(2) காழ்கலன் ஊடாக நீர் மந்தமாகவும் கனியுப்பு அயன்கள் உயிர்ப்பாகவும் கொண்டுசெல்லப்படுகின்றன.
(3) காழினூடாகவும், உரியத்தினூடாகவும் பதார்த்தங்கள் திணிவுப்பாய்ச்சல் மூலம் கடத்தப்படுகின்றன.
(4) உரியத்தினூடாக சுக்குரோசு கொண்டு செல்லல் எப்பொழுதும் மூலத்திலிருந்து தாழியை நோக்கி மாத்திரமே நிகழும்
(5) கனியுப்பு அயன்கள் உயிர்ப்பாகவோ அல்லது மந்தமாகவோ கடத்தப்படுகின்றன.

14.A, B, C ஆகிய குருதிக்கல வகைகள் மூன்றும் செவ்வென்புமச்சையில் உற்பத்தியாகின்றன. A, B என்பன கருவைக்கொண்டிருப்பதோடு C கருவைக் கொண்டிருப்பதில்லை A சிறுமணி உடைய போது B, C சிறுமணியற்றவை. B தின்குழிழ்செயலுடன் தொடர்புபட்ட அதே வேளை A, C என்பன அவ்வாறல்ல. A,B,C ஆகிய குருதிக்கல வகைகள் முறையே,
(1) நிணநீர்க்குழியம், நடுநிலைநாடி, செங்குழியம் (2) மூலநாடி, நிணநீர்க்குழியம், ஒற்றைக்குழியம்
(3) நடுநிலைநாடி, ஒற்றைக்குழியம், செங்குழியம் (4) அமிலநாடி, ஒற்றைக்குழியம், நடுநிலையநாடி
(5) நடுநிலைநாடி, நிணநீர்க்குழியம், சிறுதட்டுக்கள்



12. பின்வரும் பாடல்களை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

அல்லும் பகலும்
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

1. **'ஆர்வம்'** என்பதால் கருதப்படுவது யாது?
2. **'உள்ளம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்றினை எழுதுக?
3. **'பெரிது'** என்பதன் எதிர்க் கருத்துச் சொல் ஒன்றினை எழுதுக?
4. **'பசு'** என்பதற்குரிய ஆண் மரபுச் சொல்லை எழுதுக?
5. **'நீங்கள்'** என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக?
6. இப்பாடலிலுள்ள இணை மொழி ஒன்றினை எழுதுக
7. இங்குள்ள முன்னிலை பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக?
8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக?

## பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2012
## தமிழ்மொழியும் இலக்கியமும் - II

(இரண்டு மணித்தியாலம்)

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.** **(80 புள்ளிகள்)**

(1) சுருக்கமான விடை தருக.
(01) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இவ்வாக்கியத்தை செயற்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக?
(02) "ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்துவகை நானறியேன்" இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றை எழுதுக.
(03) "மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்க் புக்காள்" இங்கு இடம்பெறும் உருவகத்தொடர் எது?
(04) 'தீபனது புத்தகம்' - இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப் பொருள் என்ன?
(05) 'அபிஷேகம்' என்ற வடமொழிச் சொல் குறிக்கும் தமிழ்ச்சொல் எது?
(06) உலகப் புகழ்பெற்ற சுயசரிதைகள் மூன்று தருக.
(07) கட்டுரை எழுதுவதற்கான பிரதான படிமுறைகள் இரண்டும் எவை?
(08) கார்ட்டூன் (Cartoon) என்ற ஆங்கிலக் கலைச் சொல்லின் தமிழ் வடிவத்தை எழுதுக.
(09) வில்லுப்பாட்டின் உறுப்புக்களாக அமைந்த இசைக்கருவிகள் எவை?
(10) சுவரொட்டியின் பொதுவான இலட்சணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? **(20 புள்ளிகள்)**

(2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக?
(அ) நவீன விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியின் விளைவாக உலக நாடுகுள் பலவும் இன்று நன்கு விருத்தியடைந்துள்ளன. இந்நாடுகளில் வாழ்கின்ற பல்வேறு இன மக்களினதும் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்கள் என்பவற்றிலும் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களும் முன்னேற்றங்களும் அபிவிருத்திக்கான தூண்டுகோலாய் அமைந்திருக்கின்றன. தமிழ் மக்களுக்கென்று ஒரு தனித்துவமான பண்பாடும் கலாசாரமும் உண்டு. இத்தகைய கலாசாரப் பண்பாடுகள் சிதைவுறாத வகையில் நவீன மாறுதல்களை எதிர்கொண்டு எமது சமூகமும் நாடும் வளர்ச்சிபெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி ஒரு விவரணக் கட்டுரை எழுதுக.
(ஆ) இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த காலத்தில் மனிதன் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ முடிந்தது. இயற்கை எமக்காகப் பல செல்வங்களை வழங்கியுள்ள போதும் நாம் அவற்றை சரிவரப் பயன்படுத்தவில்லை. இதனால் இயற்கைச் சமநிலை குன்றி மழைவீழ்ச்சி அற்றுப்போவதோடு உலகம் அழிவை நோக்கிப் போகின்றது. இதனால் "காடுகளை வளர்த்துக் கவினுற வாழ்வோம்" என்ற தலைப்பில் உலக சுற்றுப்புறச் சூழல் தினத்தில் நீர் மாணவர் மத்தியில் ஆற்றும் சொற்பொழிவு.
(இ) ஊருக்காக உழைத்து தனக்கென சொத்து எதுவும் சேர்க்காது தன்னலமற்ற வாழ்வு வாழ்ந்து இன்று கவனிப்பாரின்றி வீதியோரத்தில் வாழும் முதியவர் ஒருவரின் சுயசரிதை.
(ஈ) உள்நாட்டில் உழைத்து வாழ்வதனைக் காட்டிலும், வெளிநாடொன்றிற்குச் சென்றால் பெருமளவு பொருளீட்டிச் செல்வந்தராய் சுகபோகங்களுடன் வாழலாம் என நினைத்த ஒருவர் வெளிநாடு சென்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வெறுங்கையனாய் தனது தாய்நாட்டிற்குத் திரும்பிய சம்பவம் ஒன்றைக் கற்பனை செய்து "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என்ற பழமொழிக்குப் பொருத்தமாக ஒரு சிறுகதை வரைக. **(25 புள்ளிகள்)**

(3) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

விளம்பரக்கலை முக்கியமாக வியாபாரத்தோடு தொடர்புடையது. வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்கமாகவே விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. நுகர்வுப் பொருட்கள் பல வகையினவாக உற்பத்தி செய்யப்படுவதனாலும் நுகர்வோரின் விருப்பு வெறுப்புக்களும் பொருளாதார நிலையும் பல்வகைப்படுவதாலும் விளம்பரம் செய்தல் இன்றியமையாததாகின்றது. விளம்பரமின்றேல் வியாபாரம் இல்லை என்ற அளவுக்கு விளம்பரக்கலை இன்று முக்கியம் பெற்றுள்ளது. எந்தெந்த வகையில் நுகர்வோரின் மனத்தைக் கவரலாம் என்பதை ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு கவர்ச்சியாக விளம்பரம் செய்வதற்குப் பெரிய வர்த்தக நிலையங்கள் விசேட உளவியலாளரை வேலைக்கு அமர்த்தி வருகின்றன.
விளம்பரக்கலை மிகவும் பழமையானதொன்று. அச்சுக்கலை தோன்றாத காலத்திலுமே வர்த்தகர்கள் சுவர்ப்பொறிப்புக்கள் மூலம் தமது பொருட்களை விளம்பரஞ் செய்துள்ளனர். ஆயினும் நவீன விளம்பரக்கலை 1850 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பமானது என்று கூறலாம். பொதுமக்கள் எழுத வாசிக்க அறிந்துகொண்ட காலம் முதல் விளம்பரக்கலை சக்திவாய்ந்த ஒரு சாதனமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. போக்குவரத்துச் சாதனங்களும், கருத்துத் தொடர்புச் சாதனங்களும் வளர்ச்சியடைந்த வேகத்தையொட்டி விளம்பரக்கலையும் விருத்தியடைந்துள்ளது எனலாம்.
விளம்பரங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கு மட்டுமன்றி, பொருட்களை வாங்குவதற்கு நுகர்வோரின் மனநிலையை மாற்றுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன விற்பனையாளர் தம்முடைய பொருட்களை வாங்கும்படி நுகர்வோரை வற்புறுத்துவதில்லை. பதிலாக விளம்பரங்களே அவற்றை வாங்கும்படி நுகர்வோரைத் தூண்டுகின்றன. சுவரொட்டிகள், செய்தித்தாள்கள், பிரசித்த சஞ்சிகைகள், வானொலி, திரைப்படம், போக்குவரத்து வாகனங்கள் முதலியன விளம்பரம் செய்வதற்கான மார்க்கங்களாகும். நல்ல முறையில் விளம்பரஞ் செய்வதனால் உற்பத்திப் பொருள்களை நுகர்வோர் வாங்குவதற்கு வழி பிறக்கிறது. இதனால் உற்பத்தியாளர் தமது உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கூடிய வருவாயைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. (10 புள்ளிகள்)

(4) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓதுபற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ்சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்!

சாத்திரங்கள் பல பல கற்பராம்
சவுரி யங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை அனைத்தும்
கடவுளர்க் கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்பீரோ!

(01) பாரத தேசம் ஓங்க உழைக்க வேண்டியவர்கள் யார்?
(02) நாற்றிசை நாடுகள் யாவும் சென்று எவற்றை இங்கு கொண்டுவந்து சேர்க்க வேண்டும்?
(03) வீரப்பெண்கள் எதனை விரைவில் ஒழிக்க வேண்டும்?
(04) 'திலக வாணுதலார்' என்பதன் பொருள் யாது?
(05) இளைய நங்கையின் எண்ணங்கள் எவை எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்? (10 புள்ளிகள்)

(5) அண்மைக் காலங்களில் பெய்த பெருமழையைத் தொடர்ந்து வீதிகளிலும் வளவுகளிலும் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக மக்கள் அஞ்சுகின்றனர். இந்நிலையில் நுளம்புப் பெருக்கத்தை ஒழிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி துண்டுப்பிரசுரம் ஒன்றினைத் தயார் செய்க. (15 புள்ளிகள்)





## உயிரியல் - I

(இரண்டு மணித்தியாலம்)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.** **ஆசிரியர் : ஈசன் சாதுவன் BSc.**

1. விஞ்ஞான முறையின் படிமுறைகளுள் பின்வருவனவற்றுள் எது இன்றியமையாததல்ல,
(1) பிரச்சினை ஒன்றை இனங்காணல்
(2) கேள்விகளை எழுப்பி அது பற்றிய கருதுகோள்களை கட்டியெழுப்புதல்
(3) கருதுகோள்களை சோதிக்கும் முகமாக பரிசோதனைகளை மேற்கொள்ளல்
(4) எதிர்வு கூறல்களை எழுப்பி அவற்றை மேலும் அத்தாட்சிகள் மூலம் சோதித்தல்
(5) கருதுகோள்களை ஏற்றுக்கொள்ளல்

2. உயிர்களில் நீரின் தொழில்களுள் இழிவளவில் முக்கியமானது,
(1) முதலுருவின் ஊடகமாக செயற்படல்
(2) கரைப்பானாகச் செயற்படல்
(3) இரசாயனத் தாக்கங்களில் பங்குபற்றல்
(4) அங்கிகளின் வாழிடமாக செயற்படல்
(5) கலங்களின் விறைப்பு நிலையைப் பேண உதவுதல்

3. கலச்சுவரில் காணப்படும் பிரதான பல்பகுதியச் சேர்வை ஒன்று எனக் கருதமுடியாதது?
(1) செலுலோசு (2) பெத்தின் (3) அரைச்செலுலோசு
(4) சுபரின் (5) பெப்ரிடோகிளைக்கன்

4. தாங்கும் சந்திகள்
(1) கலத்திடைவெளியினால் ஏற்படக்கூடிய கசிவைத் தடுக்கின்றன.
(2) அடுத்துள்ள கலங்களின் கலமென்சவ்வுகளை இணைந்து வைக்கின்றன.
(3) அடுத்துள்ள கலங்களின் கலவன்கூட்டை இணைந்து வைக்கின்றன.
(4) அடுத்துள்ள கலங்களுக்கிடையே சைகைகளை பரிமாற்ற உதவுகின்றன.
(5) அடுத்துள்ள கலங்களுக்கிடையே அயன்களைப் பரிமாற்ற உதவுகின்றன.

5. ஒட்சியேற்றும் நொதியங்களை உடைய மென்சவ்வால் சூழப்பட்ட புடகங்கள் ஆவது,
(1) இலைசோசோம்கள்
(2) நுண்ணுடல்கள்
(3) கொல்கியின் கடத்தும் புடகங்கள்
(4) கொல்கியின் சுரக்கும் புடகங்கள்
(5) தட்டக்குழியப் புடகங்கள்

6. ATP தொடர்பில் பின்வரும் எக்கூற்று தவறானது?
(1) DNA ஐ விட RNA யிற்கு கூடிய கிட்டிய நெருக்கமுடைய ஒரு மூலக்கூறாகும்
(2) எல்லா உயிர்க்கலங்களிலும் உற்பத்தியாக்கப்படும் மூலக்கூறு ஒன்றாகும்
(3) ஒளித்தொகுப்பிலும் சுவாசத்திலும் இலத்திரன் காவியாகத் தொழிற்படும்
(4) இரண்டு உயர்சக்திப் பிணைப்புகள் உடையது
(5) குழியவுருவில் தொகுக்கப்படும்

7. நொதியங்கள்
(1) அவற்றின் தொழிற்பாட்டிற்காக துணை நொதியங்களை வேண்டி நிற்கின்றன.
(2) தாக்க சமநிலையை மாற்றுவன
(3) பச்சையவுருவத்தினுள் உற்பத்தி செய்யப்படுவதில்லை
(4) ஒரு மூலக்கூறு ஒரு உயிர்ப்புள்ளியை மாத்திரம் உடையது
(5) வைரசுக்களின் காணப்படாது

8. புரோக்கரியோற்றா அங்கிகளின் தனித்துவமான அம்சம் ஒன்று எனக் கருதமுடியாதது எது?
(1) பெப்ரிடோகிளைக்கன் கலச்சுவரைக் கொண்டிருத்தல்
(2) வளிமண்டல நைதரசனை நிலைநாட்டும் ஆற்றல்
(3) மென்சவ்வால் சூழப்பட்ட புன்னங்களைக் கொண்டிராமை
(4) பிரதியெடுத்தலில் இன்ரன்கள் (Introns) காணப்படாமை
(5) அதீத சூழல்களில் உயிர்பிழைத்து வாழும் ஆற்றல்

# தோப்புக்கரணம் சொல்லும் தத்துவம்

விநாயகர் வழிபாட்டில் கைகளால் தலையில் மூன்று முறை குட்டி தோப்புக்கரணம் இடுவது வழக்கம், 'தோர்பி கர்ணம்' என்னும் வடமொழிச் சொல்லே தோப்புக் கரணம் எனப்படுகிறது. இந்தச் சொல்லுக்கு 'கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது' என்று பொருளாகும். ஒருமுறை விநாயகர், தனது மாமனாரான திருமாலின் சக்கரத்தை வாயில் போட்டுக் கொண்டு கொடுக்க மறுத்து அடம்பிடித்தார். அவரைச் சிரிக்க வைத்தால் வாயிலிருந்து சக்கரம் வெளியே வந்துவிடும் என எண்ணிய திருமால், தன் நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு கரணம் போட்டு வேடிக்கை செய்தார். விநாயகரும் அதைப் பார்த்து சிரிக்க, சக்கரம் கீழே விழுந்துவிட்டது. அன்று முதலாக விநாயகரை மகிழ்விப்பதற்காக தோப்புக் கரணம் போடும் வழக்கம் ஆரம்பமானது. இந்த வழிபாட்டிற்கு வேறொரு காரணமும் சொல்லப்படுகிறது. கஜமுகாசுரன் என்பவன் தேவர்களைச் சிறைப்பிடித்து பெருந்துன்பம் விளைவித்ததுடன், தனக்கு தோப்புக் கரணம் இடும்படியும் தேவர்களுக்கு ஆணையிட்டான். இவ்வேளையில் விநாயகப் பெருமான் அசுரனை அழித்து தேவர்களைக் காத்தார். அதற்கு நன்றிக்கடனாக தேவர்கள் தோப்புக்கரணம் செய்தனர். அதுமுதலாக இந்த வழிபாடு உண்டானதாகவும் புராண வரலாறு சொல்கிறது.



# சமய தீபம்

## இரு பஞ்சாங்கங்களினதும் வேறுபாடான கணிப்புகள் தீர்க்கப்படுமா?

இந்து மக்கள் அனுஷ்டிக்கும் விரதங்கள் மற்றும் சமய விசேட தினங்கள் தொடர்பாக வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களின் கணிப்பில் காணப்படும் வேறுபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து சரியான தீர்வினைக் காணும் முயற்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம் ஈடுபட்டுள்ளது.

இது சம்பந்தமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்து மாமன்றம் இந்து சமய ஆலோசனை சபையொன்றினை அமைத்துள்ளது. இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதியன்று கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்வருடம் இடம்பெறவிருக்கும் கந்தசஷ்டி விரதம் வாக்கிய பஞ்சாங்கத்தில் நவம்பர் 14ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 19ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான ஆறு நாட்களும், திருக்கணித பஞ்சாங்கத்தில் நவம்பர் 14ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலான ஐந்து நாட்களும் அனுஷ்டிக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருப்பதால் இந்து மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் குழப்ப நிலையைத் தவிர்க்கும் வகையிலும், இதனை ஆராய்ந்து சரியான கணிப்பை தெளிவுபடுத்தும் வகையிலும், தொடர்ந்து எதிர்காலத்தில் விரதங்கள் மற்றும் விசேட தினங்கள் தொடர்பாக இரு பஞ்சாங்கங்களின் கணிப்பிலும் மாறுபாடுகள் ஏற்படாத வகையிலும் திட்டவட்டமான முடிவொன்றைக் காணும் வகையில் இந்து மாமன்றத்தின் இந்து சமய ஆலோசனை சபையின் அன்றைய கூட்டத்தில் ஆராயப் பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வாக்கிய - திருக்கணித பஞ்சாங்கங்களின் ஆசிரியர்கள் மற்றும் சமய அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு பலவித கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தார்கள்.

இது விடயத்தை மேலும் ஆராயும் வகையில் இந்து மாமன்றம் இம்மாதம் (ஜூலை) முதலாம் திகதியன்று யாழ்ப்பாணத்திலும் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியது. நல்லூரிலுள்ள இந்து மாமன்றத்தின் யாழ். பணிமனையில் இடம்பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர், வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பாளர் வெ. இரகுநாதையர், திருக்கணித பஞ்சாங்க கணிப்பாளர் சார்பாக எஸ். இரத்தினவடிவேல், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், சிவஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக மா. அனந்தலட்சுமி, இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இது விடயம் தொடர்பாக கந்தையா நீலகண்டன் தகவல் தருகையில் "கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா ஆகியோர் அடங்கிய மத்தியஸ்த குழு இன்று (6ஆம் திகதி) வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களின் கணிப்பாளர்களை அழைத்து சந்திப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அகில இலங்கை இந்து மாமன்றம் செய்திருக்கிறது. இந்த சந்திப்பு நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், இந்து மாமன்றத்தின் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை உட்பட மாமன்ற இந்து சமய ஆலோசனை சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். இந்த சந்திப்பின் மூலம் இரு பஞ்சாங்கங்களினதும் கணிப்பு விடயத்தில் வேறுபாடுகளற்ற வகையிலான முடிவொன்றைக் காண முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.


-அ. கனகசூரியர்

## நாளை மறுதினம் (8ஆம் திகதி) மகா கும்பாபிஷேகம்

# அற்புத சக்தி படைத்த சித்தன்கேணி அருள்மிகு நாககன்னி அம்பாள்

சித்தர்கள் வாழ்ந்த சிவபூமியாகப் போற்றப்படும் சித்தன் கேணியில் அமரர் இராசையா அன்பளிப்பாக வழங்கிய காணியில் 1996ஆம் ஆண்டு அருள்மிகு நாககன்னி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு பூசை வழிபாட்டுக் கருமங்களை நடத்திவரும் சித்தஞானகுரு இந்திரன் ஐயா என அன்போடு அழைக்கப்படும் க. இராசதுரையின் பக்திபூர்வமான செயற்பாடுகளினாலும், பக்தர்களது அன்புக் காணிக்கையினாலும் ஆலயம் வளர்ச்சிநிலை பெற்று, 1997ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

சித்தஞானகுரு இந்திரன் ஐயா சிறுவயதிலிருந்தே தீவிர இறைபக்தி கொண்டவராகவும், தேவாரத் திருமுறைகளை நன்கு மனனம் செய்தவராகவும் விளங்கியவர். பன்னிரண்டாவது வயதில் சிவனும் உமையும் காட்சி கொடுத்ததுடன், தொடர்ந்தும் தெய்வீகக் காட்சியாக நாகபூஷணி அம்பாள் தரிசனமும், அருள்வாக்கு சக்தியும் கிடைக்கப் பெற்றவரானார். இவர் சித்தன்கேணி அருள்மிகு நாககன்னி அம்பாள் ஆலயத்தில் அடியார்களது பலவித குறைகளையும், நோய்களையும் தீர்த்து வருவதுடன், அருள்வாக்கும் வழங்கி வருகிறார். இதன்மூலம் நடமாடும் தெய்வமாக - ஒரு சித்தராக இவர் திகழ்கிறார் என்று சொல்வது பொருத்தமானது. யாழ் குடாநாட்டிலிருந்து மட்டுமல்ல, நாட்டின் ஏனைய



பகுதிகளிலிருந்தும் மக்கள் பலர் ஆலயத்திற்கு வருகைதந்து, தங்கள் மனக் கவலைகளைப் போக்கிச் செல்லும் அற்புத நிகழ்வு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆலயத்தில் பக்தி வழிபாட்டுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பூசகர் செந்நிறத் துணியினால் வாய் கட்டி பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதும், இங்கு உடுக்கு அடித்து காவியம் பாடுவதும், அம்பாள் அருட்கலையில் வந்து அருள்நடனம் புரிந்து அருள்வாக்கு சொல்வதும் தெய்வீக நிகழ்வுகளாக இடம்பெற்றுவருகின்றன.

இங்கு ஆனி மாதத்து பூரணை தினத்தன்று தீமிதிப்பும், தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது. பங்குனி மாதத்து கடைசி திங்கட்கிழமை 108 சங்காபிஷேகம் திருவூஞ்சல் உற்சவம் என்பன நடைபெறுவதும் வழக்கம். 1999ஆம் ஆண்டு ஆடிப்பூரம் நாளிலிருந்து அம்பாளின் திருவுலா இடம்பெறத் தொடங்கியது.

அம்பாள்மீது தீவிர பக்தி கொண்டுள்ள பக்தர்கள் இணைந்து ஆலயத்தை புதுப்பொலிவோடு அமைப்பித்து, நாளை மறுதினம் (8ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இதனைத் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

ஆலயத்தின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் தொண்டர்கள் பலர் தம்மை அர்ப்பணித்து பணியாற்றி வருகிறார்கள். இவ்வகையில் ஓய்வுபெற்ற அதிபர் இரத்தினேஸ்வரன், செ. சுபாகர், சைவப்புலவர் க. நித்தியதசீதரன் ஆகியோரது பணிகள் பாராட்டத்தக்கவை.

-சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்

## இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

07.07.2012 சனி : சங்கடஹர சதுர்த்தி

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

11.07.2012 புதன்: புனித பெனடிக்ற் நினைவு நாள்

## இயேசுநாதரின் நற்போதனைகள்

உங்கள் எதிரிகளிடம் அன்பு கொள்ளுங்கள், நன்மை செய்யுங்கள், பதிலுக்கு எதையும் எதிர்பாராமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு மிகுதியான கைம்மாறு கிடைக்கும். நீங்கள் உன்னதமானவருடைய மக்களாயிருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றி கெட்டோருக்கும் பொல்லாருக்கும் பரிவு காட்டுகிறவராக இருக்கிறார். உங்கள் விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராக இருக்கிறவாறே நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்.

## முகம்மது நபியின் நல்வாக்குகள்

தன் நற்குணத்தால் அழகானவரே, உங்களில் எனக்கு விருப்பமானவர், கியாமத் நாளில் எனக்கு மிக அருகில் இருப்பவர்.

விற்கும்போதும், வாங்கும்போதும், உரிமையைக் கேட்கும் போதும் மென்மையை கையாளுபவருக்கு அல்லாஹுத்தஆலா அருள்புரிவானாக.

# குரு லிங்க சங்கம வழிபாடு

பொதுவாக வழிபாடு என்றாலே இறைவனை வழிபாடு செய்வது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

ஒருவன் இறைவனை மூன்று விதமான முறைகளில் வழிபாடு செய்வதன் மூலம் அவனை அடையலாம். அவை குருவழிபாடு, லிங்க வழிபாடு, சங்கம வழிபாடு என்பனவாகும்.

குரு வழிபாடு என்பது ஒருவன் தனது வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக்கொள்ள தகுதியான - சிறந்த குரு ஒருவரை தேர்ந்தெடுத்து. அவர் கூறும் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, அதனூடாக வாழ்க்கையை நெறிப்படுத்தி இறைவனை அடையும் பக்குவம் பெறுதல் ஆகும்.

லிங்க வழிபாடு என்பது இறைவனை லிங்கமாக பிரதிஷ்டை செய்து, மனதார தூய பக்தியுடன் வழிபட்டு அதன் மூலம் இறைவனை அடையும் நிலை பெறுதல் ஆகும்.

சங்கம வழிபாடு என்பது சிவனின் அடியார்களை நாடிச் சென்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதும், அவர்களோடு கலந்து பேசி இறைவனை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றி தெரிந்து கொள்வதும், அவர்களுக்கு உணவளிப்பதுமாகும்.

அதாவது சிவனுக்கும் சிவனடியாருக்கும் தொண்டு செய்து இறைவனை அடைய முடியும் என்பதைக் குறிப்பதே சங்கம வழிபாடாகும்.

# தூக்குத் தண்டனையைத் தூக்கிலிட வேண்டும்

வால்மீகி ஒரு கொள்ளைக்காரராக இருந்தார். ஏழ்மை நிலையில் உள்ள பல உயிர்களைக் காப்பதற்காக அவர் கொள்ளையடித்தார். அந்த வால்மீகிதான் பிற்காலத்தில் உலகின் தலைசிறந்த இராமயணம் என்ற இதிகாசத்தைப் படைத்த வால்மீகியாக, இலக்கியப் படைப்பாளியாக மாறினார். இதேநிலை யாருக்கும் வரலாம் என இந்திய நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் தெரிவித்திருக்கிறார்.

உலக நாடுகள் எங்கும் தூக்குக் கயிறு வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதங்கள் நீண்டகாலமாகவே நடைபெற்று வருகின்றன. இந்த சூழலில் 21ஆம் நூற்றாண்டிலாவது இதற்கு தீர்வு கிடைக்குமா? என்ற ஏக்கம் மனித உரிமை ஆர்வலர்களிடம் எழுந்துள்ளது.

1967இல் இந்திய சட்டக் கமிசன் அறிக்கை தூக்குத் தண்டனை கெடுபிடிகளை குறைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1953லிருந்து 1963 வரை இந்தியாவில் மட்டும் 1422 பேர் தூக்கிலிடப்பட்டனர். இதன் காரணமாக, ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதி, அவ்வழக்கில் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கிறார் என்றால், அதற்கான அத்தியாவசியமான காரணத்தை குறிப்பிட்டாக வேண்டும் என்று 1973இல் மத்திய அரசு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது.

உலகத்தின் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்து செய்து விட்டன. இதுவரை 135 நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டுள்ளது. சதாம் உசேன், பூட்டோ போன்றோர் தூக்கிலிடப்படும்பொழுது உலக அளவில் கடுமையாக எதிர்ப்புகள் எழுந்தன. தூக்குத் தண்டனை பிரச்னையில் சீனா, ஈரான், ஈராக், பாக்கிஸ்தான், சூடான், அமெரிக்கா போன்ற நாடுகள் சற்றும் மனம் இரங்காமல் கடுமையாக நடந்து கொள்கின்றன. சிங்கப்பூர் இதில் முதல் இடம் வகிக்கிறது.

சிங்கப்பூரில் மரண தண்டனைகள் விதிக்கப்பட்டவர்கள், எந்தவித அறிவிப்புமின்றி ஏதாவதொரு வெள்ளிக் கிழமையன்று தூக்கிலிடப்படுவர். பின்னர் தான் வெளி உலகுக்கே தெரிய வரும். நைஜிரியாவைச் சேர்ந்த 21 வயதே ஆன கால்பந்தாட்ட வீரர் டோச்சி, துபாய் அணியில் விளையாடுவதற்கு ஆசைப்பட்ட போது, பலர் அவருக்கு பாகிஸ்தான் சென்று விட்டால் உனது கனவு நனவாகும் என்றனர். இதனை நம்பி இஸ்ல மாபாத் சென்றார். அங்கும் அவரது ஆசை நிறைவேறாமல், கையில் பணமில்லாமல் ஒரு சர்ச்சில் தங்கினார். அங்கு ஸ்மித் என்ற ஒரு நபர் டோச்சியை சந்தித்து பேசி, சிங்கப்பூர் மார்க்கமாக டோச்சியின் சொந்த நாடான நைஜீரியாவுக்கு விமான டிக்கெட் எடுத்து கொடுத்து வழியனுப்பினார். அப்போது அவர் சில மாத்திரைகளை டோச்சியிடம் கொடுத்து இதனை சிங்கப்பூரில் மாலச்சி என்ற என் நண்பர் பெற்றுக் கொள்வார் என்று சொல்லியுள்ளார். டோச்சி இந்த மாத்திரைகளுடன் சிங்கப்பூர் விமான நிலையத்தில் காத்திருந்த பொழுது, அவரை சந்தேகப்பட்டு கைது செய்தனர். இரண்டு ஆண்டு காலமாக வழக்கு விசாரணைக்குப் பின் அப்பாவியான டோச்சி தூக்கிலிடப்பட்டார்.

இங்கிலாந்து நாட்டில் டங்கன் பிரபு, பிரபுக்கள் அவையின் தலைவராக இருந்தபோது முதன் முதலாக தூக்குத் தண்டனை ஒழிப்பு சட்டம் கொண்டு வந்தார். மவுண்ட்பேட்டன் பிரபுவை கொலை செய்தவர்களுக்குக்கூட இங்கிலாந்து அரசு தூக்குத் தண்டனை வழங்கவில்லை. தென் ஆபிரிக்காவில் 1995இல் மரண தண்டனை ஒழிக்கப்பட்டது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஐ.நா. பொது மன்றம் தூக்குத் தண்டனை ஒழிப்பு தீர்மானம் நிறைவேற்றியது. இதனை அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் எதிர்த்தன. இத்தீர்மானத்தை 99 நாடுகள் ஆதரித்தன. 52 நாடுகள் எதிர்த்தன. 18 நாடுகளில் மரண தண்டனை போர்க்கால குற்றங்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டும், 27 நாடுகளில் பயங்கரவாதிகளுக்கு மட்டும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றன. 1976ஆம் ஆண்டு கனடா நாட்டில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டது. கனடாவில் இதற்கு முன்பு கொலை குற்றங்கள் 3.09 சதவீதம் என்ற அளவில் அதிகமாக இருந்தது. மரண தண்டனை ஒழிக்கப்பட்ட காலத்திலிருந்து கொலைக் குற்றங்கள் குறைந்து விட்டன. 1983ஆம் ஆண்டுகளில் அங்கு 2.74 என்ற அளவில் கொலைக் குற்றங்கள் நடந்தேறின.

1985ஆம் ஆண்டு பன்னாட்டு அளவில் லஞ்சம் வாங்கியதாக சோவியத் நாட்டிலும், சீனாவில் அரசுக்கு விரோதமாக உளவுத் தொழிலில் ஈடுபட்டதற்கும், விபசாரத்திற்கும், சீனா, கயானாவிலும், பொருளாதாரக் குற்றத்திற்காக ஈராக் நாட்டிலும், கற்பழிப்புக் குற்றத்திற்காக சீனா, எகிப்து, சவுதி அரேபியா, சிரியா, தாய்லாந்து, டுனீசியா ஆகிய நாடுகளிலும், களவு மற்றும் பயங்கர ஆயுதங்களை கையாண்டதற்காக சீனா, நைஜீரியா, சவுதி அரேபியா, சிரியா, உகாண்டா போன்ற நாடுகளிலும், போதைப் பொருள் குற்றத்திற்காக ஈரான், மலேசியா, தாய்லாந்து, போன்ற நாடுகளிலும், சீனாவிலும் மரண தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது என்ற வாதமும் உள்ளது. 1949ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற பன்னாட்டு சட்ட மாநாட்டில் 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கக் கூடாது என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இது சுமார் 75 நாடுகளில் தற்பொழுது நடைமுறையில் உள்ளது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் நடந்த மாநாட்டில் 70 வயது கடந்த முதியவர்களுக்கு மரண தண்டனை கூடாது என்று தீர்மானம் நிறைவேறியது. இருந்த போதிலும், 76 வயதான மகமத் முகமது தகா என்ற சூடான் நாட்டுத் தலைவரும், 78 வயதான பையோடர் ஃபெடரன்கோ என்பவரும் அமெரிக்காவிலிருந்து சோவியத் ர்யாவுக்கு நாடு கடத்தப்பட்டு அரசியல் காரணமாக தூக்கிலிடப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்களுக்கும், புத்தி சுவாதீனம் இல்லாதவர்களுக்கும் மரண தண்டனை வழங்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் உலகளவில் நடைமுறையில் உள்ளது.



பல வழக்குகளில் சம்பந்தமில்லாத பலர் பலியாகியிருக்கின்றனர். எல்லாவற்றும் சூழலும், நடைமுறைகளுமே காரணமாகின்றன. எது ஒன்றும் மாற்றத்திற்குரியதுதான். மாற்றங்கள் சில நொடிகளில் ஏற்படும். இன்றைக்கு சரி எனப்படுவது நாளையே தவறாகி விடும். அப்போது வருந்தி என்ன பயன்? குரங்கிலிருந்து மனிதன் வந்தான். அதன்பிறகு பல அறிவியல் அற்புதங்களை அவன் படைத்தான். அந்த அற்புதங்கள் அதிக அளவில் கிடைக்க வேண்டும் என்றால் மரண தண்டனையில் மாற்றங்கள் அவசியம் வரவேண்டும். அதுவே நாகரீக பாதைக்கு அழைத்துச் செல்லும் அணுகுமுறையாகும்.

தூக்கிலிடுதல், துப்பாக்கியால் சுடுதல் ஆகிய இரண்டு நடைமுறைகள் இந்தியாவில் உள்ளது. இந்திய தண்டனைச் சட்டத்தின்படி கொலை, கொலை செய்ய முயற்சி, கூட்டமாகச் சென்று கொள்ளையடித்தல் மற்றும் தாக்குதல், அரசாங்கத்திற்கு எதிராகப் போர் ஆயத்த வேலைகளை செய்தல், எதிரிக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய் சாட்சியம் அளித்தல் போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படுகிறது.

பொது மன்னிப்பு என்ற வார்த்தை நடைமுறையில் இருப்பது பயனற்று விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. பல வழக்குகளில் சம்பந்தமில்லாத பலர் பலியாகியிருக்கின்றனர். எல்லாவற்றும் சூழலும், நடைமுறைகளுமே காரணமாகின்றன. எது ஒன்றும் மாற்றத்திற்குரியது தான். மாற்றங்கள் சில நொடிகளில் ஏற்படும். இன்றைக்கு சரி எனப்படுவது நாளையே தவறாகி விடும். அப்போது வருந்தி என்ன பயன்? குரங்கிலிருந்து மனிதன் வந்தான். அதன்பிறகு பல அறிவியல் அற்புதங்களை அவன் படைத்தான். அந்த அற்புதங்கள் அதிக அளவில் கிடைக்க வேண்டும் என்றால் மரண தண்டனையில் மாற்றங்கள் அவசியம் வரவேண்டும். அதுவே நாகரீக பாதைக்கு அழைத்துச் செல்லும் அணுகுமுறையாகும்.

மரண தண்டனை குறித்து பிரச்சாரங்களை அதற்கான ஆர்வலர்கள் தொடர்ந்து எடுத்துச் செல்கின்றனர். இந்த இயக்கத்திற்கு உலக அளவில் ஆதரவு பெருக வேண்டும். அந்த ஆதரவில் தான் இந்த நோக்கம் வெற்றி பெறும். குழந்தைகள் பிறக்கும் பொழுது தவறு செய்ய வேண்டும் என்பதற்காக பிறக்கவில்லை. வளர்ந்த பின் வளருகின்ற சூழலை ஒட்டியே தவறு செய்ய முற்படுகிறார்கள். மானிடவியலும், சமூகவியலும், அரசியலும் இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்தால் மரண தண்டனை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் உறுதியாக ஏற்படும்.

ஆதிகாலத்தில் ஒரு சட்டம் நிலவி வந்தது. குற்றவாளி குற்றம் செய்தால் அவன் என்ன குற்றம் செய்தானோ அதற்கு தகுந்த மாதிரியே தண்டனை அமையும். அதாவது பல்லுக்கு பல், கண்ணுக்கு கண் என்பது போன்ற தண்டனை. அதேபோன்று இப்பொழுதும் ஒரு உயிரை எடுத்தவனின் உயிரையும் எடுக்க வேண்டும் என்ற வாதம் சரியானதல்ல. குற்றங்கள் குறைய வேண்டும் என்பதற்காகவே குற்றவாளிகளை சிறைக்கு அனுப்புகிறோம். அந்த தனிமையில் அவர்களின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு திருந்த வேண்டும். மரண தண்டனைகள் விதிப்பதால் குற்றங்கள் குறைய வாய்ப்பில்லை. தூக்குத் தண்டனையை ஒழித்துவிட்ட நாடுகளில் நடைபெறுகின்ற குற்றங்களைவிட, தூக்குத் தண்டனை நடைமுறையில் உள்ள நாடுகளில்தான் குற்றங்கள் அதிகமாக உள்ளன. நீதிபதி கிருஷ்ணய்யர் கூறியது போல, குற்றவாளிகள் திருந்த வாய்ப்பு கொடுக்க வேண்டுமேயன்றி அவர்களின் உயிரை பறித்தல் தகாத செயலாகும் ■

கே.எஸ்.இராதாகிருஷ்ணன்
நன்றி: கீற்று



# குடும்பங்களும் மாணவர்களின் சமுதாயமும்

பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின் குடும்பங்கள், ஒன்றோடொன்று தொடர்புகொள்ளும் போது, சமூக நலன் அதிகரிக்கின்றது. பிள்ளைகளைக் கவனிப்பதில் ஆர்வங்கொண்டோரின் தொகை அதிகரிக்கின்றது. பிள்ளைகள் இவர்களினால் அவதானிக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள், பிள்ளை வளர்ப்பு பற்றிய தரங்கள், நியமங்கள், அனுபவங்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்

பல சமூகங்களில் ஒரே பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் குடும்பங்களைச் சமுதாய பந்தங்கள் இணைப்பதில்லை. பாடசாலைக்கு வெளியில், பெற்றோர்கள் ஒருவரோடொருவர் சகவாசம் வைத்துக் கொள்வதில்லை என்பதும் பாடசாலை சம்பந்தமாக அவர்கள் ஒருவருடனொருவர் வைத்துக் கொள்ளும் தொடர்பு மிகக் குறைவு என்பதுமே இதன் கருத்தாகும். பக்கத்தில் ஒருவர் இந்தவாறும் மற்றயை பிள்ளைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவாறும் தமது பாடசாலை நாட்களைக் கழிக்கிறார்கள் எனினும், இப்பிள்ளைகளின் பெற்றோருக்கு ஒருவரை ஒருவர் தெரியாமல் இருப்பதே இதன் விளைவாகும். பல பிள்ளைகள், பாடசாலை முடிந்த பின் உள்ள நேரத்தின் பெரும் பகுதியை, ஒன்றில் தனிமையில் அல்லது வேறு பிள்ளைகளுடன் கழிக்கிறார்கள். ஆனால், இது அக்கறையுள்ள வயது வந்தோரின் கண்காணிப்பின் கீழ் நடைபெறுவதில்லை. பிள்ளைகளைச் சுற்றிள்ள வயது வந்தோர் பிள்ளை வளர்ப்புப் பற்றிய அடிப்படை விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளும் போதும் ஒருவருடனொருவர் தொடர்பாடும் போது பிள்ளைகளுக்கு இடைவிடாத ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கும் போதும் பிள்ளைகள் பயனடைகின்றார்கள். பிள்ளைகளுக்குக் கிடைக்கக்கூடிய செல்வமாகிய சமூக நலன், வயது வந்தோருக்கிடையில் நிலவும் தொடர்புகளில் தங்கியிருக்கும். வயது வந்தோரின் நேருக்கு நேரான சகவாசத்தில் தங்கியிருக்கும் ஓர் அமையம் என்ற வகையிலன்றி, தனது அங்கத்தவர்களை (பாடசாலை ஆளணி, மாணாக்கர்கள், மாணாக்கர்களின் குடும்பங்கள்) கொண்ட ஒரு சமுதாயமாகத் தன்னை நோக்கும் ஒரு பாடசாலை, சமூக நலன்களைச் சேகரிப்பதற்கு வழிவகுக்கும். சமூக இடைத் தாக்கங்களை ஊக்குவிப்பதற்கான அதிக அளவிலமைந்த சாத்தியக்கூறுகள் உண்டு.

**பிரயோகம்:**

ஒரு பாடசாலை தனது அங்கத்தவர்களை அதாவது, பாடசாலை ஆளணியையும் மாணக்கர்களின் குடும்பங்களையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தை உருவாக்கிய வளர்க்கும் ஆற்றலைக் கொண்டது. பாடசாலைச் சமுதாயம் ஒன்றை உருவாக்கி, வளர்ப்பதற்கான ஒரு சட்டகமானது, கல்வி பற்றிய பொதுவான விழுமியங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகள், பெற்றோர்களை ஏனைய பெற்றோர்களுடன் ஆசிரியர்களுடனும் இணைத்தல், தம் பிள்ளைகள் தொடர்பாகக் குடும்பங்கள் கொண்டுள்ள கல்விசார் அபிலாசைகளை மனதில் கொண்ட நிறுவனமாகப் பாடசாலை இயங்குவதற்கு வழிவகுத்தல் என்பவற்றை உள்ளடக்கும். பாடசாலையில் ஓர் சமுதாயத்தை மேம்படுத்துவற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் அம்சங்கள் பின்வருவனவற்றறை உள்ளடக்கும்.

> " கல்வி பற்றிய பொதுவான விழுமியங்களைத் தெளிவுபடுத்துவதற்கான வழிகள், பெற்றோர்களை ஏனைய பெற்றோர்களுடன் ஆசிரியர்களுடனும் இணைத்தல், தம் பிள்ளைகள் தொடர்பாகக் குடும்பங்கள் கொண்டுள்ள கல்விசார் அபிலாசைகளை மனதில் கொண்ட நிறுவனமாகப் பாடசாலை இயங்குவதற்கு வழிவகுத்தல் என்பவற்றை இது உள்ளடக்கும். "

**பிரதிநிதித்துவம்:**

பாடசாலையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுக்களில் பெற்றோரும் இடம்பெறுவார்கள்.

**கல்விசார் விழுமியங்கள்:**

பாடசாலைக்குரிய கல்விசார் விழுமியங்களையும் பாடசாலையின் இலக்குகளையும், பாடசாலை மாணாக்கர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் எதிர்பார்ப்பவற்றையும், பெற்றோர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து தெளிவு இவையாவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களிலிருந்து ஊற்றெடுக்கும்.

**தொடர்பாடல்:**

பல வகையான வழிகளின் மூலம், வீட்டிற்கும் பாடசலைக்கும் இடையேயான இரு வழித் தொடர்பாடல் ஏற்படுத்தப்படும். பெற்றோர், ஆசிரியர், மாணாக்கர் மகாநாடுகள், தொலைபேசி உரையாடல்கள், குறிப்புக்கள், ஒப்படைக் குறிப்புப் புத்தகங்கள் என்பனவும் இதில் அடங்கும்.

**கல்வி:**

பிள்ளைகளின் வெற்றிக்கு உதவுவதற்காக ஒவ்வொருவரினதும் வல்லமையையும், இடைவிடாது மேம்படுத்துவற்காக ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படும்.

**பொதுவான அனுபவங்கள்:**

அனைத்து மாணாக்கர்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் அதேநேரம் பொதுவான கல்வி அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள உதவும் கூட்டு நிகழ்ச்சிகளில் அல்லது பொதுவாகத் தொடர்புபட்ட நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுவார்கள்.

**சேர்ந்து பழகுதல்:**

விசேடமாக பாடசாலையின் தேவைகளுடன் தொடர்புள்ள காரணங்களுக்காகப் பாடசாலைச் சமுதாய அங்கத்தவர்களைக் கொண்ட குழுக்கள் ஒன்றுடனொன்று சேர்ந்து பழகுவதற்காகப் பாடசாலை சந்தர்ப்பங்களை ஒழுங்குபடுத்துகின்றது. உதாரணமாக, பெற்றோரை உள்ளடக்கிய குழுக்கள், வேறு பெற்றோருடன் சேர்ந்து பழகுதல், வயது குறைந்த பிள்ளைகள் வயது கூடிய பிள்ளைகளுடன் பழகுதல், மாணாக்கர்களுக்கும் வயது வந்த தொண்டர்களுக்குமிடையில் (தாத்தாக்களும் பாட்டிகளும் உட்பட) தலைமுறைகளுக்கிடையிலான அறிவுரைகள்.

வளங்களைப் பயன்படுத்துவதற்காகச் சமுதாயத்தை எட்டிப் பிடிக்க வேண்டுமென்று ஒரு பாடசாலை முடிவு செய்யும்போது, அப்பாடசாலை மாணாக்கர்களின் பூர்த்தி செய்யப்படாத தேவைகள் யாவை என்பதை முதலில் தீர்மானிப்பது விவேகமாகும். அதன்பின்னர், இத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சேவைகளை வழங்குவதற்காச் சமுதாய அமையங்களை அணுகி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். பாடசாலையில் காணப்படும் வளங்களைக் கொண்டு சுலபமாகப் பூர்த்தி செய்ய முடியாத மாணாக்கர்களின் தேவைகளுள் பின்வருவன அடங்கலாம்: அடிப்படைக் குடும்பத் தேவைகள் (உடை, உணவு, உறையுள், பிள்ளைப் பராமரிப்பு) சுகாதாரத் தேவைகள் (ஊசி மருந்தேற்றல், பரிசீலித்தல், பற் பராமரிப்பு) நடத்தைசார் பயிற்சி பொழுதுபோக்கு, கற்பித்தல், உளரீதியான சோதனை, வலது குறைவுக்கான சாதனங்கள், ஓய்வுவேளை உடல் தொடர்பான கவனிப்பு விசேடமான சாமர்த்தியங்கள், ஆர்வங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சந்தர்ப்பங்கள் (விஞ்ஞானம், இசை, ஓவியம், ஓட்ட விளையாட்டுக்கள், இலக்கியம் போன்றவை).




ஜெரே ப்ரோஃபி யின் கட்டுரையிலிருந்து

# நேட்டோ படைகளை அடித்து நொருக்குவோம்: தலிபானியர்கள் எச்சரிக்கை



பாகிஸ்தானில் நேட்டோ படைகளுக்கான பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என தலிபானியர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து பாகிஸ்தானை சேர்ந்த தலிபான் அமைப்பின் தகவல் தொடர்பாளர் எஷானுல்லா குறிப்பிடுகையில் ஆப்கானிஸ்தானில் உள்ளவர்கள் எங்கள் சகோதரர்களை போன்றவர்கள். அவர்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் நேட்டோ படைகளுக்கு பொருட்களை வழங்கும் வாகனங்கள், பாகிஸ்தான் வழியாக செல்வதை அனுமதிக்க முடியாது.

அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்படும் பாகிஸ்தான் அரசு சிறிது காலம் இந்த போக்குவரத்தை நிறுத்தி வைத்திருந்து நாடகமாடியுள்ளது என்றார்.

நேட்டோ படைகளுக்கு எரிபொருள் வழங்கும் டேங்கர் லொரிகள் வரும் 7ஆம் திகதி முதல் தங்கள் பணியை துவக்க உள்ளன. நேட்டோ படைகளுக்கான வாகனங்களுக்கு சாலையை திறந்து விட்டதற்காக பாகிஸ்தான் டேங்கர் உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே பாகிஸ்தான் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் கமார் சமான் குறிப்பிடுகையில் நேட்டோ படைகளுக்காக அதிநவீன ஆயுதங்கள் பாகிஸ்தான் வழியாக கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது என்றார்.

## அமெரிக்காவில் சூறாவளி

# தொடர்ந்து 5 நாளாக மின்சாரம் இல்லாததால் மக்கள் அவதி



அமெரிக்காவில் வீசிய கடும் சூறாவளி புயலால், மின் விநியோகம் சீராகாததால் ஐந்தாவது நாளாக மக்கள் நேற்றும் அவதிக்கு உள்ளாயினர்.

அமெரிக்காவில் ஓஹியோ, விர்ஜினியா, கொலம்பியா, மேரிலேண்ட் உள்ளிட்ட பகுதிகளை சூறாவளி புயல் கடந்த வாரம் தாக்கியது.

இதில் 23 பேர் பலியாகினர். மின் கம்பங்கள் சாய்ந்து, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் 10 லட்சம் மக்கள் மின்சாரம் இன்றி அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இண்டியானா முதல் விர்ஜினியா வரையுள்ள பகுதிகளில் இன்னும் மின்சார விநியோகம் சீராகாததால் பல தொழிற்சாலைகள் இயங்கவில்லை.

அமெரிக்காவின் பல மாகாணங்களில் தற்போது கோடை வெப்பம் அதிகரித்துள்ளது. மின்சாரம் இல்லாததால் ஏ.சி.யும், மின் விசிறியும் ஓடவில்லை. இதனால் முதியோரும், குழந்தைகளும் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பெரும்பாலான வீடுகளில் மைக்ரோ ஓவன் மற்றும் மின் அடுப்புகளை பயன்படுத்தி வந்துள்ளனர். மின்சாரம் இல்லாத காரணத்தால் பல குடும்பங்களில் சமைக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உணவுகளை வழங்கி வருகின்றன. சூறாவளியால் துண்டிக்கப்பட்ட ஒயர்களை இணைப்பு கொடுக்கும் பணியில் 3 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## யுரேனியத்தை அதிகம் செறிவூட்டுகிறோமா?

# பி.பி.சிக்கு ஈரான் கண்டனம்

பிரிட்டனின் பிரதான இணைய ஊடகமான பி.பி.சி (பார்சி மொழி), ஈரானின் யுரேனிய செறிவூட்டல் குறித்து அபரிமிதமான அளவில் தவறான செய்தி வெளியிட்டுள்ளதாக ஈரான் தொலைக்காட்சி ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

ஈரானின் யூரேனிய செறிவூட்டலுக்கு மேற்கத்திய நாடுகள் அனைத்தும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இதன்காரணமாக ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீது வர்த்தக மற்றும் போக்குவரத்துத் தடை விதித்துள்ளது.

இந்தசூழ்நிலையில் லண்டனின் பிபிசி, ஈரானில் யுரேனிய செறிவூட்டல் 63 சதவீதம் உள்ளதாக செய்தி வெளியிட்டது.

ஆனால் எங்களிடம் 23 சதவீதமே யுரேனியம் செறிவூட்டப்படுவதாக தெரிவித்த ஈரான் தொலைக்காட்சி, பி.பி.சி வெளியிட்ட செய்தி கண்டனத்திற்குரியதென்று மிகவும் கடிந்துள்ளது.

# நடுவானில் விமானத்தில் பெண்கள் குடுமிப்பிடி சண்டை



சீனாவில் நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் பெண்கள் சண்டை போட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சீனாவின் குன்மிங் என்ற இடத்தில் இருந்து புறப்பட்ட விமானத்தில் 18 வயதான ஷீவு என்ற இளம் பெண் தனது தாய், அத்தை மற்றும் தோழி ஆகியோருடன் பயணம் மேற்கொண்டார்.

அதே விமானத்தில் லீ (வயது 30) என்ற பெண்ணும் ஏறினார்.

அப்போது இருக்கையில் அமருவது தொடர்பாக ஷீவு, லி இடையே தகராறு ஏற்பட்டது. விமான பணிப்பெண்கள் சமரசம் செய்தும் எடுபடவில்லை.

இந்த தகராறு கைகலப்பாக மாறி தாக்கிக் கொண்டனர். லீயின் ஆடைகள் கிழிக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டார். அடுத்து, விமானம் தரை இறங்கியதும், சண்டையில் ஈடுபட்ட 5 பெண்களும் வெளியேற்றப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

தாக்குதலில் காயம் அடைந்த லியின் மருத்துவ செலவிற்காக இளம்பெண் ஷீவுவிடம் இருந்து ரூ.8 ஆயிரம் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

மேலும் புதிதாக டிக்கெட் எடுத்து பயணிக்கும்படி பொலிசார் அறிவுரை கூறி, பின்னர் 5 பெண்களையும் விடுவித்தனர்.

# உலக பார்வை

# நெல்சன் மண்டேலாவின் மகள் தூதரானார்



தென்ஆப்ரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் மகள் ஜெனானி, அர்ஜென்டினா நாட்டின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆப்ரிக்க தலைவரான நெல்சன் மண்டேலாவின் மூத்த மகள் ஜெனானி (வயது-53).

மண்டேலா சிறையில் இருந்த போது 16 வயது பெண்ணான ஜெனானி தனது தந்தையை பார்க்க சென்ற போது, இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

கடந்த 1973ம் ஆண்டு சுவாசி நாட்டு இளவரசரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.

ஜெனானி அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் படித்தார். கணவரை விவாகரத்து செய்த பின், தற் போது தென் ஆப்ரிக்காவில் தான் வசிக்கிறார்.

இதற்கிடையே இவர் அர்ஜென்டினா நாட்டு தூதராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் தூதராக நியமிக்கப்பட்டுள்ளதை அர்ஜென்டினா அரசு வரவேற்றுள்ளது.



அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களுக்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு திரும்பிய அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமாவை வரவேற்கும் இராணுவ மேஜர் ஜெனரல் மைக்கேல் லின்னிங்டன்.

# தேனீர் குடிக்க வந்த பிரதமரை காக்க வைத்த பெண் ஊழியரால் பரபரப்பு



பிரிட்டனில் கேன்டீன் பெண் ஊழியர் ஒருவர், அங்கு தேனீர் குடிக்க வந்த பிரதமரை காத்திருக்க வைத்த, சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன் ஆயுதப்படை தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அலுவலக காரில் சென்றார்.

பிளைமோவுத் பகுதியில் வந்த போது வழியில் சான்விஜ்பாக்ஸ் பிளஸ் காபி ஷாப்பில் கார் நிறுத்த சொல்லி அங்கு சென்று தேனீர் குடிக்க கடைக்குள் சென்றார்.

அங்கிருந்த பெண் ஊழியர் ஷீலா தாமஸ், பிரதமர் என தெரியாமல் வரிசையில் நிற்குமாறு கூறினார். வரிசையில் நிற்க முடியாது சீக்கிரம் தேனீர் கொடுக்குமாறு கூறினார்.

உடனே ஆத்திரம் அடைந்த ஊழியர் தான் பணியில் பிஸியாக இருப்பதால், உடனே தர முடியாது வரிசையில் நிற்குமாறு கூறி வாக்குவாதம் செய்தார்.

அதன் பின் அங்கு பிரதமரின் ஊழியர்கள் வந்தனர். இவர் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் என்பதை விவரித்தனர்.

இதனையடுத்து அந்த பெண் மன்னிப்பு கேட்டார். எனினும் அவரின் வாக்குவாதத்தினால் அங்கு 10 நிமிடம் காபிக்காக பிரதமர் கமரூன் காத்திருக்க வேண்டியதாயிற்று.

இந்தத் தகவலை டெய்லி மெயில் என்ற பத்திரிக்கை செய்தியாக வெளியிட்டுள்ளது.

# இந்திய செய்திகள்

## புதுச்சேரி அருகே பழங்குடியின மக்கள் மீது போலீசார் தடியடி:

### 10க்கும் மேற்பட்டோர் படுகாயம்



புதுச்சேரியை அடுத்த தவளக்குப்பத்தில், மறியலில் ஈடுபட்ட பழங்குடியின மக்கள் மீது, போலீசார் தடியடி நடத்தியதில், கர்ப்பிணி பெண், குழந்தைகள் உட்பட, 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

100க்கும் மேற்பட்டோர் மறியல்: தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில், கொத்தடிமைகளாக உள்ள பழங்குடியின மக்களை மீட்டு, மறுவாழ்வு அளிக்கக் கோரி, டி.என்.பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின மக்கள், 100க்கும் மேற்பட்டோர், நேற்று காலை, புதுச்சேரி, தவளக்குப்பம், கடலூர் மெயின் ரோட்டில், திடீர் மறிய லில் ஈடுபட்டனர். பழங்குடியின கூட்டமைப்பின் மாநிலச் செயலர் செல்வராஜ் தலைமையில், மறியல் நடந்தது. "புதுச்சேரியின் பல பகுதிகளில் வசிக்கும் பழங்குடி யின மக்கள், தமிழகம் மற்றும் பிற மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, குறைந்த ஊதியத்தில், கொத்தடிமைகளாக வேலை செய்து வருகின்றனர். அவர்களை மீட்டு, மறுவாழ்வு அளிக்க வேண்டும். கொத்தடிமை மீட்புச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

"தரதர" வென இழுத்து சென்று தவளக்குப்பம் போலீசார், பேச்சு வார்த்தை நடத்தினர். மறியலை கைவிட மறுத்ததால், ஆத்திரமடைந்த போலீசார், முன்னறிவிப்பின்றி, தடியடி நடத்தினர்.



இரு சக்கரவாகனத்தில் ஐந்து பேரை ஏற்றி செல்லும் சாகசம் எந்த அபாயத்தில் கொண்டு செல்லும் என்பது இவர்களுக்கு தெரியவில்லையா?

## மின் தட்டுப்பாடு 15 நாட்களில் தீரும்: மத்திய அமைச்சர் நம்பிக்கை

நாட்டில், தற்போது நிலவி வரும் கடுமையான மின்சார தட்டுப்பாடு, இன்னும் 15 நாட்களில் கட்டுப்படுத்தப்பட்டு விடும் என, மத்திய மின் துறை அமைச்சர் சுஷில்குமார் சண்டே நம்பிக்கை தெரிவித்தார்.

டில்லியில் நேற்று, மத்திய மின் துறை அமைச்சர் சுஷில்குமார் சண்டே மற்றும் இணை அமைச்சர் கே.சி.வேணுகோபால் ஆகியோர், நிருபர்களிடம் பேசியதாவது: நாட்டில் தற்போது கடும் மின்சார தட்டுப்பாடு நிலவி வருவது உண்மை தான்.

தற்போது கோடை காலம் என்பதால், டில்லி மற்றும் நாட்டின் பெரிய நகரங்கள் மின்சார பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள் ளன. இந்நிலை, இன்னும் 15 நாட்களில் கட்டுப்படுத்தப்படும் என உறுதி பட நம்புகிறேன்.

நாட்டில் தினமும், 1,29,017 மெகாவாட் மின்சாரம் தேவை. ஆனால், நேற்று முன்தினம், 1,15,364 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைத்துள்ளது. இதில், 13,653 மெகாவாட் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்சார தட்டுப்பாடு ஏற்பட, நீர் மின்சார தயாரிப்பில் எந்த வித பிரச்னையு மில்லை. ஆனால், சில இடங்களில் சில பிரச்னைகள் உள்ளன.

நாட்டின் ஒட்டு மொத்த மின்சார உற்பத்தி, இரண்டு லட்சம் மெகாவாட். அதில், நீர் மின்சார உற்பத்தி மூலம், 22 சதவீத அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படு கிறது. இவ்வாறு, மத்திய அமைச் சர்கள் ஷண்டே மற்றும் வேணு கோபால் தெரிவித்தனர்.

## தி.மு.க வினரை கைது செய்வது ஒரு பயனற்ற வேலை:

### ஜெயலலிதா அறிக்கை



தி.மு.க வினரை கைது செய்து சிறையில் அடைப்பது அரசுக்கும் பொலிசுக்கும் பயனற்ற வேலையாக இருக்கும் என்பதால் அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறை நிரப்பும் போராட்டம் நடத்தும் தி.மு.க.,வினர் பிணை கேட்கக்கூடாது என தி.மு.க. தலைமை உத்தரவிட்டிருந்தது.

நில அபகரிப்பு புகார்கள் தி.மு.க., ஆட்சி காலத்திலேயே கொடுக்கப்பட்டன. ஆனால் நிலத்தை அபகரித்தவர்கள் தி.மு.க.,வை சேர்ந்தவர்களாக இருந்ததால் அவர்கள் மீது அப்போதைய தி.மு.க., அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தல் வாக்குறுதிப்படி அ.தி.மு.க., ஆட்சி அமைந்ததும் நிலத்தை அபகரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலத்தை அபகரித்தவர்கள் தி.மு.க.,வினர் என்பதால் அவர்கள் பாதிக்கப்பட்டனர்.

தி.மு.க. மீது ஏற்பட்டுள்ள வெறுப்பை திசை திருப்பவும் தி.மு.க. மீது கூறப்படும் ஊழல்புகார்களை மறைக்கவுமே சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் ஈடுபடும் தி.மு.க வினரை கைது செய்து சிறையில் அடைப்பது அரசுக்கும், பொலிஸாருக்கும் பயனற்ற வேலையாக அமையும் என்பதால் அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டேன் என கூறியுள்ளார்.

## கருணாநிதி குடும்பத்துக்கு ரூ.773 கோடி கை மாறியது எப்படி? ஆதாரம் தாக்கல்



2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில், தி.மு.க., தலைவர் கருணாநிதி குடும்பத்துக்கு, 773 கோடி ரூபாய் எப்படி கைமாறியது என்பதற்கான ஆதாரங்கள் தங் களிடம் உள்ளதாக, நாடாளுமன்ற கூட்டுக் குழுவிடம், மத்திய அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கான ஆதாரங்களையும் தாக்கல் செய்துள்ளனர்.

தி.மு.க.,வைச் சேர்ந்த ராஜா, தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்தபோது, "2ஜ" ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் முறைகேடு நடந்ததாக, புகார் எழுந்தது. இதுகுறித்த வழக்கை நாடாளுமன்ற கூட்டுக் குழுவும் விசாரித்து வருகிறது.

இந்நிலையில், ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்து விசாரிக்கும் மத்திய அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள், பார்லிமெண்ட் கூட்டுக் குழு முன், ஆஜராகி, சாட்சியம் அளித்தனர். அப்போது, "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில், ஆதாயம் பெற்ற நிறுவனங்கள், தி.மு.க.தலைவர் கருணாநிதி குடும் பத்தினருக்கு, 223 கோடி மற்றும் 550 கோடி ரூபாய் என, தனித்தனியாக அளித்ததற்கான ஆதாரங்கள், தங்களிடம் உள்ளதாகக் கூறினார். அந்த ஆதாரங்களையும் தாக்கல் செய்தனர்.

## 50 ஆண்டுகளாக செயற்பாட்டில் இருக்கும் முதல் ஜனாதிபதியின் வங்கிக்கணக்கு



இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களின் சேமிப்பு வங்கி கணக்கு கடந்த 50 ஆண்டுகளாக இன்று வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது.

சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திரபிரசாத் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இவர், கடந்த 1884-ம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி வான் மாவட்டம் ஜெராதி கிராமத்தில் பிறந்தார்.

காங்கிரஸ் ஆட்சியில் மத்திய அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புக்களை வகித்த ராஜேந்திர பிரசாத், கடந்த 1952-ம் ஆண்டு இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இரு முறை ஜனாதிபதியாக இருந்த ராஜேந்திரபிரசாத், 1963-ம் ஆண்டு பெப்ரவரி 28-ம் திகதி இறந்தார்.

எனினும் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு 1962-ம் ஆண்டு ஒக்ரோபர் 24-ம் திகதியன்று பீகார் மாநில தலைநகர் பாட்னா, கண்காட்சி சாலையில் உள்ள பஞ்சாப் நே'னல் வங்கியில், தனது பெயரில் சேமிப்பு கணக்கை தொடங்கினார்.

அவரது சேமிப்பு கணக்கு இன்று வரை செயற்பாட்டில்தான் உள்ளது என வங்கி நிர்வாகம் பெருமையுடன் தெரிவித்துள்ளது.

இது குறித்து வங்கியின் சீனியர் மேலாளர் எஸ்.எல். குப்தா கூறுகையில், இந்தியாவின் முதல் ஜனாதிபதி, தனது சேமிப்பு வங்கி கணக்கை எங்கள் வங்கியில் வைத்துள்ளது பெருமையாக உள்ளது.

தற்போது அவரது சேமிப்பு வங்கி கணக்கு "0380000100030687" -என்ற எண்ணில் அவரது புகைப்படமும் ஒட்டப்பட்டுள்ளது.

இதனை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆடிட்செய்து இவரது கணக்கில் வட்டி தொகையை செலுத்தி வருகிறோம்.

இதுவரை அவரது கணக்கில் உள்ள ரூ. 1,813 தொகையினை சொந்தம் கொண்டாட யாரும் வரவில்லை என்றார்.

## பழைய பாணியில் ஆசி வழங்க முடியவில்லையாம்:

### நித்தியானந்தா கவலை



தன்னை சந்திக்க வரும் சிஷ்யைகளை முன்புபோல் கட்டிப்பிடித்து ஆசி வழங்க முடிவதில்லை என்று சுவாமி நித்தியானந்தா கூறியுள்ளார்.

திருவண்ணாமலையிலுள்ள தனது ஆசிரமத்திற்கு சுவாமி நித்தியானந்தா வந்தார். பின்னர் அவரது சீடர்களுக்கு ஆசிரமத்தின் முழு நேர ஊழியர் என்ற பொறுப்பை வழங்கும் தீட்சை கொடுக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

இதுபோன்ற நிகழ்ச்சியின்போது நித்தியானந்தாவை ஒவ்வொரு சீடரும், சிஷ்யையும் கட்டி அணைத்து தீட்சை பெறுவார்கள்.

இவ்வாறு கட்டியணைக்கும் போது சீடரின் தலையில் கை வைத்து, தீட்சை கொடுப்பார் நித்தியானந்தா.

ஆனால் நேற்று முன் தினம் நடந்த தீட்சையின்போது பெண் சிஷ்யர் களை அவர் கட்டி அணைக்கவில்லை. மாறாக தலையில் மட்டும் தொட்டு தீட்சை கொடுத்தார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், என் சீடர்களுக்கு இது முக்கியமான தருணம். என் மீது சாய்ந்து தீட்சை பெற முடிய வில்லையே என சிஷ்யை கள் வருந்த வேண்டாம். அப்படி செய்தால் படம் பிடித்து பத்திரிகை களில் பிரசுரித்து விடுகிறார்கள். அதனால் சிலவற்றை தியாகம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

# வளங்கள் இல்லா நிலையிலும் சாதனை படைத்த சுந்தரபுரம் அ.த.க

வலிகாமம்

வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மிகவும் குறைந்த பிள்ளைகளுடனும் வளப் பற்றாக்குறையுடனும் காணப்பட்டாலும் தம்மாலும் சம்பியனாகி சாதனை படைக்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மேசைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் பலமிக்க அணியாக காணப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை வெற்றி



பெற்று சம்பியனாகியது.

இரண்டாம் இடத்தை தெல்லிப் பழை யூனியன் கல்லூரியும் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டது.

# வடமாகாண தடகள போட்டியில் பதிவாகின 6 புதிய சாதனைகள்

வலிகாமம்

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற முதல் நாள் விளையாட் டுப் போட்டிகளில் ஆறு புதிய சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்கு மாகாணமாக இருந்து வட மாகாணம் தனியாகவும் கிழக்கு மாகாணம் தனியாகவும் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதல் தடவையாக கடந்த நான்கு ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தாண்டு முதல் தடவையாக சாதனைகள் பதிவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகிய இந்தாண்டுக்கான தடகளப் போட்டிகளின் முதல்நாள் இடம்பெற்ற நிகழ்வுகளின் அடிப்படையில் ஆறு புதிய சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

21 வயதுப்பிரிவினருக்கான போட்டிகளில் ஆண்கள் பிரிவில் இரண்டு சாதனைகளும் பெண்கள் பிரிவில் ஒரு சாதனையும் பதிவு செய்யப்பட்டுளள்து.

19வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் ஒரு சாதனையும் 17வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் இரண்டு சாதனைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

21வயதுப் பிரிவு ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்தாண்டு சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 4:29:7 என்ற பெறுபேற்றை 2012 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.வினோவிதுரன் 4:22:8 செக்கனிலும் வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலய வீரன் 4:20:0 செக்கனிலும் ஓடி சாதனையை ஏற்படுத்திய போதிலும் வவுனியா பூவரசங்குளம மகா வித்தியால்ய வீரன் கே.சதீஸ்குமாரின் சாதனை புதிய சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்தாண்டுகளின் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 5:36:7 செக்கன் என்ற பெறுபேற்றை 2012ஆம் ஆண்டு வவுனியா மத்தியமகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.வினோஜினி 5:26:9 செக்கினில் ஓடி புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்தாண்டுகளின் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 5:32:0 செக்கன் என்ற பெறுபேற்றை வவுனியா புதுக்குளம் மகா வித்தியால்யத்தைச் சேர்ந்த ஆர்.சாலினி 5:25:4 செக்கினில் ஓடி புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.



மேற்படி 03 வீர வீராங்கனைகளும் ஒலிம்பிக் சத்தியப்பிரமாணம் எடுக்கின்றனர்.

# எஸ்.எல்.பி.எல். நட்சத்திர வீரர்கள் அறிவிப்பு





அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள இலங்கையின் ருவென்ரி-20 தொடரான ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடருக்கான "ஐகன்" வீரர்கள் என அழைக்கப்படும் அவ்வணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நட்சத்திர வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் இரண்டு அணிகளுக்கான "ஐகன்" வீரர்களாக வெளிநாட்டவர்களான சயீட் அப்ரிடி, கிறிஸ் கெய்ல் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

7 அணிகள் பங்குபற்றவுள்ள இந்த எஸ்.எல்.பி.எல். தொடரில் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட நகெனஹிர அணியின் "ஐகன்" வீரராக சயீட் அப்ரிடியும், ஊவா மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஊவா யுனிக்கோன்ஸ் அணியின் "ஐகன்" வீரராக அதிரடி வீரர் கிறிஸ் கெய்லும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய அணிகளின் "ஐகன்" வீரர்களாக இலங்கையின் முக்கிய வீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட பஸ்னாஹிர பியர்ஸ் அணியின் "ஐகன்" வீரராக திலகரட்ண டில்ஷானும், மத்திய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட கந்துரட்ட கைற்ஸ் அணியின் "ஐகன்" வீரராக குமார் சங்கக்காரவும், தென்மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட றுகுண ரைனோஸ் அணியின் "ஐகன்" வீரராக லசித் மலிங்கவும், வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட உத்தர ஒரிக்ஸஸ் அணியின் "ஐகன்" வீரராக முத்தையா முரளிதரனும், வடமேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட வயம்ப வோல்வ்ஸ் அணியின் "ஐகன்" வீரராக மஹேல ஜெயவர்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் ஐ.பி.எல். போட்டிகளின் அமைப்பில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இத்தொடரில் ஒவ்வொரு அணியிலும் 6 வெளிநாட்டு வீரர்கள் அனுமதிக்கப்படவுள்ளதோடு, விளையாடும் பதினொருவர் அணியில் 4 வெளிநாட்டு வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

அத்தோடு விளையாடும் பதினொருவர் அணியில் 21 வயதிற்குட்பட்ட உள்ளூர் வீரரொருவரும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் மற்றும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ள இத்தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பித்து 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

| எஸ்.எல்.பி.எல். அணி | நட்சத்திர வீரர்கள் |
|---|---|
| நகெனஹிர | சயீட் அப்ரிடி |
| ஊவா யுனிக்கோன்ஸ் | கிறிஸ் கெய்ல் |
| பஸ்னாஹிர பியர்ஸ் | திலகரட்ண டில்'ான் |
| கந்துரட்ட கைற்ஸ் | குமார் சங்கக்கார |
| றுகுண ரைனோஸ் | லசித் மலிங்க |
| உத்தர ஒரிக்ஸஸ் | முத்தையா முரளிதரன |
| வயம்ப வோல்வ்ஸ் | மஹேல ஜெயவர்தன |

# 32 தடவைகள் அரையிறுதியில் பெடரர்

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் போட்டி களின் அரையிறுதிச் சுற்றுக்கு 32 முறை முன்னேறியவர் என்ற பெருமையைப் பெற்றார் சுவிற்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர்.

இதன்மூலம் அமெரிக்காவின் ஜிம்மி கானர்ஸின் சாதனையை (32 முறை அரையிறுதிக்கு முன்னேறியது) சமன் செய்தார் ஃபெடரர்.

விம்பிள்டன் போட்டியில் புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் ஃபெடரர் 6-1, 6-2, 6-2 என்ற நேர் செற்களில் ரீயாவின் மிக்கெய்ல் யூஸ்னியை வீழ்த்தியதன் மூலம் இந்த சாதனையைப் படைத்தார். இதுவரை யூஸ்னிக்கு எதிராக 14 முறை விளையாடியுள்ள ஃபெடரர், அனைத்திலும் வெற்றிகண்டுள்ளார்.

ஃபெடரர் தனது அரையிறுதியில் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சை சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜோகோவிச் வெற்றி**

மற்றொரு காலிறுதியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-4, 6-1, 6-4 என்ற நேர் செற்களில் ஜேர்மனியின் புளோரியன் மேயரைத் தோற்கடித்தார். ஜோகோவிச் தொடர்ந்து 9-வது முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டியின் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# சாதனை படைக்க வருகிறார் இரு கால்களையும் இழந்த ஆஸ்கர்

ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இரு செயற்கை கால் பொருத்தப்பட்ட முதல் வீரர் என்ற 3பெருமை பெறுகிறார் ஆஸ்கர் பிஸ்டோரியஸ். இவரது பெயர் 4 ஓ 400 தொடர் ஓட்டத்துக்கான தென் ஆபிரிக்க அணியில் இடம் பெற்றுள்ளது.

30ஆவது ஒலிம்பிக் போட்டி (ஜுலை 27 - ஆக., 12) லண்டனில் நடக்க உள்ளது. இதற்கான 400 மீ., ஓட்டத்தில் தகுதி பெறும் வாய்ப்பை பிஸ்டோரியஸ் 0.22 வினாடிகளில் பரிதாபமாக இழந்தார்.

இந்நிலையில் 4 ஓ400 மீ., தொடர் ஓட்டத்தில் பங்கேற்க, தென் ஆப்ரிக்கா சார்பில் பிஸ்டோரியஸ், 25,தேர்வு செய்யப்பட்டுள்ளார். 11 மாத குழந்தையாக இருக்கும் போது பிறவியிலேயே ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, இவரது இரண்டு கால்களும் (முழங்காலுக்கு கீழே) அகற்றப்பட்டன. பின் "கார்பன் பைபரினால் "ஆன செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. விடாமுயற்சி காரணமாக தடகளத்தில் முத்திரை பதித்தார். மற்ற சாதாரண வீரர்களுக்கு நிகராக ஓடி வியப்பு ஏற்படுத்தினார்.

"பிளேடு ரன்னர்" என செல்லமாக அழைக்கப்பட்ட இவர், 2008ல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டிக்கான 400 மீ., ஓட்டத்தின் தகுதிச் சுற்றில் தோல்வி அடைந்தார். கடந்த ஆண்டு தென்கொரியாவில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் தொடரின் 4ஓ400 மீ., தொடர் ஓட்டத்தில் இரண்டாவது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். இதன்மூலம் இவருக்கு லண்டன் ஒலிம்பிக்கில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது.

தற்போது மற்ற வீரர்களுடன் சேர்ந்து ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ளார். தவிர, மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் விளையாட்டு போட்டிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதில் இவர் 100, 200, 400 மற்றும் 4 ஓ 400 மீ., ஓட்டத்தில் பங்கேற்க உள்ளார்.

இதுகுறித்து பிஸ்டோரியஸ் கூறுகையில், "எனது வாழ்க்கையின் மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாக கருதுகிறேன்.

ஒலிம்பிக், பாராலிம்பிக் என இரண்டிலும் கலந்து கொள்ள உள்ளேன் என்றார்.

# இலங்கைக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

இலங்கைக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஒரு இருபது ஓவர் போட்டியில் விளையாடவுள்ள 15 பேர் அடங்கிய இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சச்சின் டெண்டுல்கர் இந்தத் தொடரில் இடம்பெறவில்லை. ஆனால் அதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஆசிய கோப்பையில் விளையாடாத சேவாக், 'கிர்கான், உமேஷ் யாதவ் ஆகியோர் மீண்டும் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சச்சினுக்குப் பதிலாக ஐ.பி.எல் போட்டியில் சிறப்பாக விளையாடிய இளம் வீரர் அஜிங்க்யா ரஹானே சேர்க்கப்பட்டுள்ளார்.

சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா சரியாக விளையாடாததால் கழற்றி விடப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக பிரக்யான் ஓஜாவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள் ளது.

ஹர்பஜன் சிங்குக்கு இந்த முறையும் அணியில் இடம் கிடைக்கவில்லை. ராகுல் சர்மா அணியில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

இலங்கை மைதானம் சுழற் பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அஸ்வின், ஓஜா, ராகுல் சர்மா என 3 சுழற்பந்துவீச்சாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல் போட்டியில் மோசமாக விளையாடிய யூசுப் பதானுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஐ.பி.எல் போட்டியில் அசத்திய வேகப் பந்து வீச்சாளர் அசோக் திண்டா அணியில் இடம்பிடித்துள்ளார்; அதேநேரத்தில் இர்ஃபான் பதான், பிரவீண் குமார் ஆகியோருக்கு இடம் கிடைக்கவில்லை.

ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவினர் மும்பையில் புதன் கிழமை கூடி அணியைத் தேர்வு செய்தனர். இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் வரும் 21-ல் தொடங்கி ஆகஸ்ட் 4-ல் நிறைவடைகிறது. ஆகஸ்ட் 7-ம் தேதி இருபது ஓவர் ஆட்டம் நடைபெறுகிறது.

**அணி விவரம்**

மகேந்திர சிங் டோனி (தலைவர்), விராட் கோலி (உப தலைவர்), வீரேந்திர சேவாக், 'கீர்கான், கௌதம் கம்பீர், அஸ்வின், உமேஷ் யாதவ், அசோக் திண்டா, சுரேஷ் ரெய்னா, வினய் குமார், ரோஹித் சர்மா, பிரக்யான் ஓஜா, அஜிங்க்யா ரஹானே, மனோஜ் திவாரி, ராகுல் சர்மா.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 06.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது